விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikkathir


விழயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 03, வெள்ளிக்கிழமை 18.11.2016 | கதிர் 13

பாரம்பரிய உயர்தர (இந்திய)
சைவ உணவகம்
யாழ் சுவையூற்று
இல.369, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
தொ.பே.: 0772335103

*நாடாளுமன்றில் சம்பந்தன் வலியுறுத்து*

# மக்கள் களைத்து விட்டனர் விரைந்து தீர்வு வேண்டும்!

## அரசுடன் இணைந்து பணியாற்ற நிகழ்ச்சித் திட்டமும் கோருகிறார்



கொழும்பு, நவம்பர் 18

"எதிர்பார்ப்புக்களுடன்பொறுமையாகக் காத்திருந்து மக்கள் களைப்படைந்துவிட்டனர். ஆகவே, விடயங்களை விரைந்து தற்போது நாம் பூர்த்தி செய்ய வேண்டும்.

நாம் அரசில் இல்லாத போதிலும், நாம் சுட்டிக்காட்டும் பணி இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்காக அரசுடன் இணைந்து செயற்படத் தயார். அதனால் அதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் செயற்படுவதை நாம் உறுதிப்படுத்துவோம்.

-இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன். பக்கம் 20 »

## வரவு – செலவுத் திட்டத்தை ஆதரித்து இன்று கூட்டமைப்பினர் வாக்களிப்பர்

நாடாளுமன்றில் வரவு–செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாசிப்பின் முடிவில் இன்று அதன் மீதான வாக்கெடுப்பு இடம்பெறும் போது அந்தத்திட்டத்தை ஆதரித்து வாக்களிக்க எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருப்பதாக அறிய வருகின்றது. நேற்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கொழும்பில் கூடி ஆராய்ந்து இது தொடர்பான முடிவை எடுத்தது. (உ)

## இலங்கைக் கடற்படையின் சூட்டில் இரு தமிழக மீனவர்கள் காயமாம்!

*நாகைப்பட்டினத்தில் நேற்றுப் பதற்றம்*

நாகைப்பட்டினம், நவ.18

இலங்கைக் கடற்படை நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழக மீனவர்கள் இருவர் காயமடைந்துள்ளனர் என்று தமிழக செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நாகைப்பட்டினம் மற்றும் காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த 9 மீனவர்களுடன் புதன்கிழமை இரவு ஆழ்கடலுக்குச் சென்ற மீனவர் படகு ஒன்றே துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகிய நிலையில் நேற்று அதிகாலை நாகைக் கடற்கரைக்கு விரைந்து திரும்பியது என்று கூறப்படுகின்றது. காயமடைந்தோர் உடனடியாக அம்புலன்ஸ் மூலம் பாண்டிச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

காரைக்கால் மீன்பிடித்துறை முகத்திலிருந்து தொழிலுக்குச் சென்ற இவர்களின் படகு நாகை கோடியக் கரையில் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் அதன் மீது வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன எனக் கூறப்பட்டது. (உ)

## சிங்களவர் அச்சத்துடன் வாழும்போது தமிழரின் அச்சத்தை நீக்க முடியாது!

*புதிய கட்சியில் இணைந்த பஸில் காட்டம்*

கொழும்பு நவ.18

"வடக்கில் சிங்கள மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் அச்சமடைந்தவர்களாக இருக்கின்றனர். சிங்கள மக்கள் அச்சத்துடன் வாழும்போது தமிழ் மக்களின் அச்சத்தை நீக்க முடியாது" – இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தவறு இழைத்தது உண்மை. அந்த தவறுகளை நாம் உணர்ந்துவிட்டோம். தவறுகளைத் திருத்திக் கொண்டு மீண்டும் நாட்டை ஆட்சி செய்வதற்கான சந்தர்ப்பத்தை மக்கள் எங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையில் உருவாக்கப்பட்ட ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பு இராஜகிரியவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய பஸில் பக்கம் 20 »

## அளப்பு அருணாசலம்



அவர் தோக்கும் வரைக்கும் தானும் பக்கத்திலை இருந்து வாலாட்டினதைத்தான் உப்பிடிச் சொல்லுறார் போலை...!

## கடும்போக்கு பிக்குகள் இணைந்து புதிய 'நிகாயா' அமைக்கத் திட்டம்!

*விரைவில் அறிவிப்பு வெளிவரலாம்*


சிங்களக் கடும்போக்குடன் செயற்படுகின்ற பௌத்த பிக்குகளின் பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து தனியான தேரர்கள் பிரிவு (நிகாயா) ஒன்றை அமைப்பதற்குத் தயாராகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பிக்குகள் குழுக்கள் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நாடு, இனம் மற்றும் சமயம் என்பன தொடர்பில் மக் பக்கம் 20 »

## வடமாகாணத்தை அச்சுறுத்திய கொள்ளையர் கும்பல் கைது!

*கைக்குண்டுகள், கூரிய ஆயுதங்கள் மீட்பு*





வடக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களில் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பங்களில் ஈடுபட்டுவந்த நான்கு பேர் கொண்ட கும்பல் ஒன்றைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடம் இருந்து இரு கைக்குண்டுகளும் கூரிய ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

நெடுங்கேணி, வீரபுரம், இளவாலை, கிளிநொச்சி ஆகிய இடங் பக்கம் 20 »

## மஹிந்தவுடன் நரிகள் இருக்கின்றன; அதனாலேயே தேர்தலில் தோற்றார்!

*முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா*

கொழும்பு நவ.18

மஹிந்த ராஜபக்ஷவுடன் நரிகள் இருப்பதனால்தான் அவர் கடந்த தேர்தலில் தோல்வியடைந்தார். இந்த நரிகளினாலேயே நான் தொடர்ந்தும் சிங்கமாக செயற்படுகின்றேன் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தந்தையும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பக்கம் 20 »

# பிற மத நிந்தனையை இஸ்லாம் கண்டிக்கிறது; நல்லிணக்க செயற்பாட்டுக்கு கூட்டாக அழைப்பு

## முஸ்லிம் அமைப்புகள் ஒன்றாக இணைந்து விடுத்தன

பிறமதங்களை நிந்தனை செய்வதை இஸ்லாம் கண்டிக்கின்றது. பிற மத குருமார்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ளுமாறும் அது வலியுறுத்துகின்றது. இஸ்லாத்தின் இப்போதனைகளைப் புறக்கணிக்கும் விதத்தில் எழுதுவதையும் பேசுவதையும் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதையும் நாம் கண்டிக்கிறோம்.

– இவ்வாறு இலங்கை முஸ்லிம் இயக்கங்கள் மற்றும் அமைப்புகள்தாம் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

இனவாதத்தைத் தூண்டும் பேச்சுக்கள், செயற்பாடுகள் தொடர்பாக அவை விடுத்துள்ள கூட்டறிக்கையின்விரம்வருமாறு:-

இஸ்லாம் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் மார்க்கமாகும். இந்தவகையில் சமூக உறவுகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும் இஸ்லாம் அங்கீகரிப்பதில்லை.

மதங்களுக்கிடையில் வீண் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் விதத்தில் முஸ்லிம்கள் செயற்படக்கூடாது என்றும் அடுத்தவர்களின் மத உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும் என்றும் இஸ்லாம் போதிக்கின்றது.

இஸ்லாத்திற்கு எதிரான செயற்திட்டங்கள் எந்த சக்திகளின் மூலம் முன்னெடுக்கப்பட்டாலும் அவர்கள் செயற்படும் பாணியில் அதை எதிர்கொள் வதை இஸ்லாம் ஏற்கவில்லை. தீமையை நன்மையைக் கொண்டு தடுக்குமாறும் தீமையை சுட்டிக்காட்டும் போது மென்மையான முறையில் பேசுமாறும் பிறமதத்தவர்களது உள்ளங்கள் புண்படும் விதத்தில் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தக் கூடாது என்றும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

பிறமதங்களை நிந்தனை செய்வதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கும் அதேநேரம் பிற மதகுருமார்களுடன் கண்ணியமாக நடந்துகொள்ளுமாறும் வலியுறுத்துகின்றது. இஸ்லாத்தின் இப்போதனைகளைப் புறக்கணிக்கும் விதத்தில் எழுதுவதையும் பேசுவதையும் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எந்தவொரு முஸ்லிமும் பிற சமூகங்களது சமய நடவடிக்கைகளையோ மத குருமார்களையோ இழிவுபடுத்தும் விதத்தில் கருத்துக்கள் வெளியிடுவதை நாம் கண்டிப்பதுடன் இது இஸ்லாமிய நடைமுறைகளுக்கும் போதனைகளுக்கும் முரணானது என்பதையும் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் முஸ்லிம்களின் புனித நூலான அல்- குர்ஆனையும் கொச்சைப்படுத்தும் வகையில் மேற் கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் நாம் கண்டிப்பதோடு, இவற்றில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வாறான சட்ட விரோத செயற் பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக் காவிட்டால் அது எம்நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாதக விளைவுகளையே ஏற்படுத்தும்.

அத்துடன் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளை இனங்கண்டு அவற்றைத் தடுக்க அரசு முனைப்புடன் செயற்பட வேண்டும் என்றும், முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களை முஸ்லிம் சமயம் சமூக தலைமைகளுடன் ஆலோசிப்பதன் மூலமே சிறந்த முடிவுகளை அடைய முடியுமென்பதையும் அரசுக்குக் கூறிக்கொள்கின்றோம் – என்று உள்ளது.

அகில இலங்கை ஜம்மய்துல் உலமா, அகில இலங்கை முஸ்லிம் இளைஞர் சங்கங்களின் சம்மேளனம், ஸ்ரீலங்கா ஜம்மய்து இஸ்லாமி, ஸ்ரீலங்கா ஷரீயா கவுன்ஸில், அகில இலங்கை தௌபீட் ஜம்மாத், ஸ்ரீலங்கா இஸ்லாமிக் மையம், முஸ்லிம் இளைஞர்களின் உலக சம்மேளனம், ஜம்மத் அன்ஸாரி சுன்னத்தில் முகம்மதியா, அனைத்துப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் சங்கம், ஜம்மத்துஸ் சலமா, சர்வதேச இஸ்லாமிய நிவாரண நிறுவனம், சைலன் முஸ்லிம் இளைஞர் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில், தேசிய சூறா கவுன்ஸில், கொழும்பு மாவட்ட மஸ்ஜித் சம்மேளனம், அல் ஹிக்மா நலன்புரி சங்கம், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, முஸ்லிம் இளைஞர் முன்னணி லீக்குகளின் அகில இலங்கை யூனியன், ஜமாத் உட் தௌபீட், விரைந்து செயலாற்றும் அணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம், விவாத மற்றும் நல்லிணக்கக் கவுன்ஸில் ஆகியனவே இந்த அறிக்கையைக் கூட்டாக விடுத்துள்ளன.

# குடல்வளரி நோய்க்கு உரிய நேரத்தில் சிகிச்சை இல்லை: முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், நவ.18

குடல் வளரி நோய்க்கு உரிய நேரத்தில் சிகிச்சை வழங்கப்படாமையால் கிருமித்தொற்று ஏற்பட்டு வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

மன்னார் வங்காலையைச் சேர்ந்த பிரான்ஸிஸ் இசையாஸ் சூசை (வயது–64) என்ற ஏழு பிள்ளைகளின் தந்தையே யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது,

மேற்படி வயோதிபர் கடந்த முதலாம் திகதி வயிற்றுவலி காரணமாக மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு ஒன்பது நாட்களாகத் தங்கி விடுதியில் சிகிச்சை பெற்றார்.

கடந்த 9 ஆம் திகதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அவருக்கு குடல் வளரி நோய் உள்ளமை பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த நோய் அதிக பாதிப்பை ஏற்படுத்தியமையால் அந்த வயோதிபர் 10 ஆம் திகதி உயிரிழந்தார். குடல் வளரியில் ஏற்பட்ட கட்டியில் கிருமித்தொற்கு ஏற்பட்டமையாலேயே அவர் உயிரிழந்ததார் எனத் தெரிவித்த வைத்தியர்கள் ஏற்கனவே அதற்கு உரிய சிகிச்சை வழங்கியிருந்தால் அவர் உயிர் பிழைத்திருப்பார் என்று தெரிவித்த னர்.

இதேவேளை, மன்னார் வைத்தியசாலையில் இருந்து தந்தை உரிய காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டிருந்தால் அவர் பிழைத்திருப்பார் என்றும் மன்னார் வைத்தியசாலை வைத்தியர்கள் அவ்வாறு செய்யவில்லை என்றும் இறந்தவரின் மகன் குற்றம்சாட்டியுள்ளார். (ம -10)

# பரிசளிப்பும் ஒளிவிழாவும்

கோப்பாய்,நவ.18

கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்புவிழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முன்றலில் அதிபர் திருமதி. கு.அ்சோக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆனோல்ட் கலந்துகொள்ள வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் மரியன்னை தேவாலய பங்குத்தந்தை அருட்கலாநிதி அன்ரன் மத்தாயஸ், கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் தெற்கு கிராம உத்தியோகத்தர் திருமதி ஸ்ரீ.கீர்த்திகா, கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன், ஓய்வுபெற்ற ஆசிரியர் வே.பத்மநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-35)

# நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பு கொந்தளிப்பாக மாறும் சூழ்நிலை!

நாட்டைச்சூழவுள்ள கடற்பரப்பு கொந்தளிப்பாக மாறும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போதைய சூழலில் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பு கொந்தளிப்பானதாக மாறக்கூடும் என்பதால், கடற்றொழில் மற்றும் கடற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் அவதானம் தேவை என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடற்பரப்பில் காற்றின் வேகம் சடுதியாக அதிகரிக்கலாம். வளிமண்டலத்தில் தென்கிழக்கு பகுதியில் திரண்டுள்ள முகில் கூட்டங்கள் காரணமாக மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் ஊடாக மாத்தறை வரை நீடிக்கும் கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடலில் மழை பெய்யும். இதனால் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை அதிக மழை பெய்யக்கூடும் என்றும் சப்ரகமுவ, கிழக்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் 100 மில்லிமீற்றர் மழை எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் திம்புலாகல – கந்தேகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்றினால் 25 வீடுகள் சேதமடைந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்தியாவின், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை 68 சதவீதத்துக்குக் குறைவாகவே பெய்துள்ளதாகவும் பருவமழை தொடங்கி நீண்ட நாள்களாகியும் கனமழை இல்லை என்றும் சென்னை வானிலை ஆராய்ச்சி நிலைய உதவிப் பணிப்பாளர் ஜெனரல் எஸ்.பி. தம்பி தெரிவித்துள்ளார். இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர் எனவும் மழைக்கு பதிலாக பல்வேறு பகுதிகளில் பனிக் குளிர் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு சென்ற இ.போ.ச. பஸ் மீது கல்வீச்சு!

வடமராட்சி,நவ.18


பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இ.போ.ச பருத்தித்துறைச் சாலைக்குரிய பஸ் ஒன்று கல்வீசித் தாக்கப்பட்டதில் பஸ்ஸின் பின்பக்கக் கண்ணாடி சேதமடைந்தது என்று சாலை முகாமையாளர் கே.கந்தசாமி தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்பட்ட பஸ் 5.45 மணியளவில் கலிகைச் சந்திக்கும் கோவில் சந்தைக்கும் இடைப்பட்ட அணின்சிலடி என்னுமிடத்தில் தாக்குதலுக்குள்ளானது.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்கள் பஸ்ஸின் பின்பக்கமாக கற்களை வீசித் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் பஸ்ஸின் பின்பக்கக் கண்ணாடி சேதமடைந்தது. மாற்று பஸ் அனுப்பப்பட்டு சேவை தொடரப்பட்டது என்று சாலை முகாமையாளர் மேலும் கூறினார்.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ஐ-30-40-9-23)




# கல்வியியற் கல்லூரிகளுக்கான நேர்முகப் பரீட்சை மாத இறுதியில்

கொழும்பு,நவ.18

கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள் ஜனவரி மாதம் கல்லூரிகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சின், ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான ஆணையாளர் கே.எம்.எச்.பண்டார தெரிவித்தார்.

50 சதவீதமான மாணவர்கள் திறமை அடிப்படையிலும், ஏனைய 50 சதவீதமானோர் பிரதேச செயலாளர் மட்டரீதியிலும் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர் என அவர் கூறினார்.

30 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களிலிருந்து நான்காயிரத்து 65 பேர் கல்வியியற் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர் எனவும் ஆணையாளர் தெரிவித்தார். கூடுதலானோர் ஆரம்பக் கல்விப் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திருடர்களுடன் தொடர்புடைய பெண் ஒருவர் பொலிஸாரால் கைது

## பொருள்களும் மீட்கப்பட்டன




யாழ்ப்பாணம், நவ.18

யாழ்ப்பாணத்தில் பல்வேறு திருட்டுச்சம்பவங்களுடன் தொடர்புடைய இளைஞருடன் பெண் ஒருவரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகர் திட்டி பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இவருடன் 19 வயதுடைய இளைஞர் ஒருவரும் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டார்.

மேலும், கைது செய்யப்படும் போது, 2 மடிக்கணினிகள், 2 சைக்கிள்கள்,10 கையடக்கத் தொலைபேசிகள், மீள்நிரப்பு அட்டைகள் மற்றும் நகைகள் உட்பட 7 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அவர்களிடம் இருந்து கோப்பாய் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை, இருவரையும் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான பெண் கைதான இளைஞனுக்குச் சிறியதாய் உறவுமுறை என்று பொலிஸார் கூறினார். (ஐ)

# முதியோர் தின நிகழ்வுகள் சண்டிலிப்பாயில் நாளை

சண்டிலிப்பாய், நவ.18

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகமும் சண்டிலிப்பாய் பிரதேச மட்ட முதியோர் சங்கங்களின் சமாசம் மற்றும் மாற்று வலுவுடையோர் சுய உதவிக் குழுவும் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர் தின விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், வலி.தென்மேற்கு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நேசரட்ணம் செல்வகுமாரி ஆகியோரும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் வ.செல்வம், வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சற்குணராஜா, யாழ் மாவட்ட முதியோர் மேம்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. செல்மன் பாலகுமாரி, யாழ்.மாவட்ட சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இணைப்பாளர் திருமதி வி.கிருஷாந்தி, சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.சிவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# ஏழாலை கொலைச் சந்தேகநபர் 10 மாதங்களின் பின் கைதானார்

சுன்னாகம், நவ. 18

ஏழாலை சமாதிக் கோயில் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை நேற்று மல்லாவி, பாண்டியன்குளம் பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர் என்று சுன்னாகம் குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கபெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு மல்லாவிப் பகுதிக்குச் சென்ற விசேட பொலிஸ் குழு, குறித்த சந்தேகநபரை பாண்டியன்குளம் பகுதியில் உள்ள பழைய வீடு ஒன்றினுள் வைத்து நேற்று கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளது.

ஏழாலை சமாதிக் கோயில் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி மைத்துனர்கள் இருவருக்கு இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு, மற்றும் குடும்பப் பிரச்சினை கைகலப்பாக மாறியது. இச்சம்பவத்தில் இரத்தினம் ஜீவராஜ் (வயது- 38) என்ற குடும்பஸ்தர் மீது கோடரி வெட்டு மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தில் தலையில் படுகாயம் அடைந்த ஜீவராஜ் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 24ஆம் திகதி உயிரிழந்திருந்தார்.

சம்பவத்தை அடுத்து கோடரியால் வெட்டிய பிரதான சந்தேகநபர் ஊரை விட்டு தலைமறைவாகியிருந்தார். கடந்த பத்து மாதங்களாக தேடப்பட்டு வந்த நிலையில் நேற்று பிரதான சந்தேகநபரான இரத்தினம் நகுலேஸ்வரன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## ஆவணக் காப்பக நிகழ்வு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், நவ.18

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தின் 41ஆவது நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு, நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள காப்பக அலுவலகத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் "சப்புமல்" நிறுவனத்தின் இயக்குநரும், ஒளிப்படக் கலைஞருமான றொஹான் டி சொய்சா இலங்கையின் மிக முக்கிய நவீன கலை இயக்கமான '43 குழு ஓவியர்கள்' பற்றியும் அவர்களின் வரலாற்று முக்கியத்துவம் குறித்தும் சிறப்புரை ஆற்றுவார்.

கலைஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு காப்பகத்தின் முகாமையாளர் விமலா வேல்தாஸ் தெரிவித்துள்ளார். (இ-7)

## மருதங்கேணி வைத்தியசாலையில் நலன்புரி சங்கம்

பருத்தித்துறை, நவ.18

மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரி சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவராக டாக்டர் ஆர்.சுரேஸ், உபதலைவராக ம.மரியதாஸ், செயலாளராக சி.பொன்னம்பலம், உபசெயலாளராக வே.கஜேந்திரன், பொருளாளராக வே.பிரசாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

போசகர்களாக மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன், டாக்டர் கே.ஆறுமுகம், டாக்டர் உமாபதிசிவம் ஆகியோர் தெரிவாகியுள்ளார்கள். (இ-31)

## யாழ்.மாவட்டக் கரையோரக் கிராமங்களில்

# ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பம்

வலி.மேற்கு, நவ.18

யாழ். மாவட்டத்தில் உள்ள கரையோரக் கிராமங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டச் செயலகம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அதிகாரிகள் இணைந்து இதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான கரையோரக் கிராமங்களை இனங் காண்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படிப பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான பொருத்தமான செயற்றிட்டங்கள் உருவாக்கப்படவுள்ளன. குறிப்பாக, கடற்றொழில் சார்ந்த வாழ்வாதார உதவித் திட்டங்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பொருத்தமான உதவித்திட்டங்கள் போன்றவை தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக, யாழ். மாவட்டத்தின் கரையோரங்களில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொருத்தமான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடையாளப்படுத்தப்பட்டுள்ள கிராமங்களில் செயற்படும் கிராமமட்ட அமைப்புக்களின் ஊடாகவே இந்தச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (ம-53)

## புலோலி மத்தியில் சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா

பருத்தித்துறை, நவ.18

பருத்தித்துறை புலோலி மத்தியில் வீரபத்திரர் சனசமூக நிலையத்தின் அங்குரார்ப்பணமும் கட்டடத்திறப்பு விழாவும் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஓய்வு பெற்ற தபால திபர் எஸ்.சிவயோகலிங்கம் தம்பதிகள், இலங்கை வங்கியின் யாழ்.மாவட்ட சிரேஷ்ட முகாமையாளர் சி.ஆனந்தராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் சனசமூக நிலையச் கட்டடத்தை அமைப்பதற்கான காணியை சிவயோகலிங்கம் பரமேஸ்வரி தம்பதிகள் அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள். புலோலி மத்தி கிராம சேவையாளர்பிரிவு மக்களிடம் திரட்டப்பட்ட சுமார் 5 லட்சம் ரூபா பணத்தில் சனசமூக நிலையக் கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. (இ-31)

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

கனடாவில் புலம்பெயர்ந்துள்ள எழுத்தாளர் வ.ந.கிரிதரனின் உதவியில் தொண்டைமானாறு வீரகத்தி வித்தியாலய மாணவர்கள் 20 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் மற்றும் பொறுப்பான ஆசிரியரிடம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. வ.ந.கிரிதரன் சார்பில் சு.குணேஸ்வரன் அவற்றை வழங்கினார்.

நிகழ்வில் கிரிதரனின் 'குடிவரவாளன்' நாவலும் வித்தியாலய நூலகரிடம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

முன்னர் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் கற்சிலைமடு வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



ஆறுமுகநாவலர் குருபூசை மற்றும் பரிசுத்தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. பாடசாலையின் அதிபர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பொ.தயானந்தனும், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமாரும் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர். மாணவர்களின் கலை நிகழ்வுகள், விவாத மன்றம், ஆறுமுகநாவலர் நினைவுச் சொற்பொழிவு போன்ற நிகழ்வுகளும் நடைபெற்றன. (இ-10)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 – 222 3000, editor@kalaikkathir.lk
விளம்பரம்: 021 – 221 9440, ads@kalaikkathir.lk
விநியோகம்: 021 – 222 2600

## ஆயுதப் போர் முடிவுறுத்தப்பட்டதால் பேரினவாத ஆக்கிரமிப்பு தீவிரமாகிறதே!

நாட்டில் யுத்தம் முடிவுறுத்தப்பட்டு விட்டது, அமைதி ஏற்பட்டு விட்டது, சமாதானம் வந்துவிட்டது என்றெல்லாம் கூறப்படுகின்றது. ஆனால், அவையெல்லாம் வெறும் புனை கதைகள் தாம் என்பதே நிஜமாகி வருகிறது எனலாம்.

துப்பாக்கிகள் கனலும் ஆயுதப் போராட்டம் முடிவுறுத்தப் பட்டுவிட்டது என்பது உண்மையே. குண்டுச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுகளும் அடங்கிவிட்டன என்பதும் மெய்மைதான். சதைகளைப் பிய்த்து உதறி, சமுதாய இருப்பையே உருக்குலைத்து, பெரு நஷ்டத்தை விளைவித்து, இரத்த ஆற்றைப் பெருக்கெடுக்க வைத்த ஆயுதச் சமர் நின்றுவிட்டது என்பது வாஸ்தவம்தான்.

ஆனால், இந்த நாட்டில் அத்தகைய ஆயுதப் போராட்டம் வெடிக்கக் காரணமாக அமைந்த இனவாதச் சமர் மட்டும் இன்னும் முடிந்துவிடவில்லை.

இந்த நாட்டில் ஆயுதப் போராட்டத்தை முகிழ்விக்கச் செய்யக் காரணமாக அமைந்த அந்த இனவாதக் கொந்தளிப்புத் தானும் இன்னமும் அடங்கிவிடவில்லை. அது தற்சமயம் முன்னெப்போதும் இல் லாத வகையில் தீவிர உருக்கொண்டிருக்கின்றது. பேரச்சத்தைத் தரும் அபாய சமிக்ஞையாக இன்று மாறியுள்ளது.

இதனையே நாட்டின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். சிறுபான்மையினரான தமிழர் தரப்பின் பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டுகின்றனர்.

"தமிழரின் குடிப்பரம்பலை அழித்தொழிக்கும் தீவிர யுத்தத்தைப் பாதுகாப்புத் தரப்பும் மகாசங்கத்தினரும் தீவிரமாக முன்னெடுத்திருக்கின்றனர்"- என்ற சாரப்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் விசனத்துடன் சுட்டிக் காட்டியமையும் இதனைத்தான்.

இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைச் சிதைத்தழித்து, அவர்களின் தாயகக் கோட்பாட்டை நாசமாக்கி, அதன் மூலம் இலங்கைத் தீவை தனித்து சிங்கள, பௌத்த நாடு என்று அறிவிக்கும் ஏகபோக மமதையோடு, எதிர்பார்ப்போடு, கடந்த 70 ஆண்டுகளாக - இலங்கைத் தீவு சுதந்திரம் பெற்ற காலம் முதல் - பௌத்த, சிங்களப் பேரினவாதத்தினால் ஓர் இனவாத யுத்தம் இந்தத் தீவில் தொடர்ந்து தடையின்றி முன்னெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

சிறுபான்மை இனம் ஒன்றை அப்படியே கபளீகரம் செய்து, இலங்கைத் தீவில் அதன் வரலாற்றுத் தடத்தையே துடைத்தெறியும் - கொடூர இனச் சிதைவழிப்புக்கு எதிராக, தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வதற்காக சிறுபான்மையினமான தமிழினம், வேறுவழியின்றி ஆயுதத்தைக் கையிலெடுத்தது. அதுவே இந்த நாட்டில், ஆயுதப் போர் என்ற பெரு யுத்தம் வரலாற்றுப் பிறப்பெடுக்கக் காரணமாயிற்று.

எந்தப் பேரினவாத ஆக்கிரமிப்புக்கு எதிராக அந்த ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதோ, அதே பேரினவாத சக்திகளின் கைகள்மீண்டும் வலிமையாக ஓங்கும் விதத்தில் அந்த ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது; அடக்கப்பட்டு விட்டது.

அதனால், சிறுபான்மையினரின் தனித்துவத் தாயகத்தை அழித்தொழிக்கும் இனவாத யுத்தமும் மீண்டும் தடைகள், தடுமாற்றங்களின்றி - எதிர்ப்புகள், முட்டுக்கட்டைகளின்றி - தடுப்பார் கேட்பாரின்றி - மும்முரமாகத் தொடர்கின்றது.

சிறுபான்மையினரான தமிழர்களின் தாயகத்திலும் தமது பேரினவாத தனித்துவத்தை உறுதிசெய்து, ஆக்கிரமித்து மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதே இந்த இனவாத யுத்தத்தின் மூலோபாயச் சிந்தனை.

அந்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் குறியீடாகவே தமிழர் தாயகத்தில் புத்தரின் சிலைகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

அதனையே, தமது நாடாளுமன்ற உரையில் பட்டியலிட்டு அம்பலப்படுத்தியிருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

ஆயுத யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு அதன் தொடராக நீடித்த ராஜபக்ஷக்களின் அதிகார ஆதிக்கமும் முடிவுறுத்தப் பட்டுவிட்டது.

இதனால், நாட்டில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் மூலம் சகலருக்குமான சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்றார் ஜனாதிபதி மைத்திரிபால. ஆனால், சிலர் இந்த நிலைமையை இனவாதத்தை வலுப்படுத்தும் வாய்ப்பாகப் பயன்படுத்த முயல்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டுகின்றார். அந்தக் கருத்துக்குள்ளும் தொக்கி நிற்பது -அல்லது அவர் சுட்டிக் காட்டுவதிலும் உட்சூட்சுமமாகப் புதைந்திருப்பது - பேரினவாதத்தின் இனத்துவ யுத்தத்தைத்தான்.

ஆயுதப் போர் முடிந்துவிட்டது என்றால், பேரினவாதத்தின் அடக்குமுறைப் போர் எப்போது முடிவுறுத்தப்படும்? ஆக்கிரமிப்புத் தீவிரம் எப்போது அடக்கப்படும்?

அப்போதுதான், இந்தத் தீவில் உண்மையான அமைதியும், நிலையான சமாதானமும், இயல்பான சௌஜன்யமும் சாத்தியமாகும்.

நல்லாட்சி அரசு மனம் கொள்ளுமா...?

# மக்கள் வங்கிக்கு ஆள்சேர்ப்பு விண்ணப்பதாரிகள் வயதெல்லை 28

## விண்ணப்ப முடிவுத் திகதி நவ.30

மக்கள் வங்கி மாவட்டங்கள் தோறும் 'வாடிக்கையாளர் சேவை உதவியாளர்' என்ற பதவி நிலையில் ஆள்களைப் பதவிக்கு அமர்த்துவதற்கு விண்ணப்பங்களைக் கோரியிருக்கின்றது.

பின்வரும் தகுதிகள் அதற்கு வேண்டப்படுகின்றன :-

*ஜி.சி.ஈ (சாதாரண) தரப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம், தமிழ் / சிங்களம் ஆகியன உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி.

*உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. 2016 நவம்பர் 30 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்.

*விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்பு, புரிந்துணர்வு, எண்கள் பற்றிய திறன் ஆகிய 3 வினாத்தாள்களைக் கொண்ட பரீட்சை ஒன்றுக்குத் தோற்ற வேண்டியிருக்கும். அப்பரீட்சை மட்டத்தில் எதிர்பார்க்கப்படும் திறமை மட்டத்தை அடைபவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

தெரிவு செய்யப்படுவோர் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றத் தயாராக இருக்க வேண்டும். எனினும், முதலில் சேவையில் சேர்க்கப்படுகின்ற பிராந்தியத்தில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் சேவையாற்ற வேண்டியது கட்டாயமாகும்.

முதலில் 4 வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் சேர்க்கப்படுவர். பயிற்சியின் பின்னர் சேவை நிரந்தரம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு தினம் 2016 நவம்பர் 30 ஆகும்.

மாதிரிவிண்ணப்பப் படிவத்தை www.peoplesbank.lk என்ற இணையத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 1000 பேரை மக்கள் வங்கி புதிதாக சேவைக்கு உள்ளீர்த்துக் கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# புகையிலைக்கு மாற்றுப் பயிர் இவ்வருடம் பெரும் போகத்தில்!

## கமநல அபிவிருத்தி ஆணையாளர் தெரிவிப்பு

வடமராட்சி, நவ.18

புகையிலைக்குப் பதிலாக மாற்றுப் பொருளாதாரப் பயிர்களை அறிமுகம் செய்யும் வேலைத் திட்டம் இவ்வாண்டு (2016) பெரும் போகம் மற்றும் அடுத்த (2017) ஆண்டு சிறு போகத்துக்குரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது என்று கமநல அபிவிருத்தி சேவைகள் ஆணையாளர் ஏ.கே.என் விக்கிரமசிங்கா சகல கமநல சேவை நிலையங்களுக்கும் தெரிவித்துள்ளார்.

இது சம்பிரதாயமான வேலைத் திட்டம் ஒன்றாக அல்லாமல் விவசாயிகளின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் தேசிய வேலைத் திட்டமாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் புகையிலைக்குப் பதிலாக மாற்றுப் பொருளாதார பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு போதியளவு நீர் வழங்குவதற்கு இயன்றவரை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் விவசாயிகள் வேறு வெளிச் சக்திகளுக்கும் மற்றும் அழுத்தங்களுக்கும் உட்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடமராட்சிப் பிரதேச விவசாயிகள் இவ்வாண்டு பெரும் போகத்தில் புகையிலைப் பயிர்ச் செய்கைக் கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். ஏற்கனவே புகையிலை நாற்றுமேடைகளை அமைத்துள்ளனர். தோட்டங்களைப் பண்படுத்தும் நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுடன் நாட்டில் புகையிலைச் செய்கை முற்று முழுதாக நிறுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-30)

# தற்கொலையைத் தடுக்கும் அமைப்பு வடக்கில்!

யாழ்ப்பாணம், நவ.18

வடக்கில் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில்தற்கொலைகள் அதிகரித்து வரும் நிலையில் இளைஞர் யுவதிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் தற்கொலைகளைத் தடுக்கும் முயற்சியுடனும் 'கை கொடுக்கும் நண்பர்கள்' எனும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன அழுத்தம் காரணமாக தற்கொலை முடிவு எடுப்பவர்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இந்த அமைப்பு மன அழுத்தத்தில் உள்ளவர்கள் தனிமையில் பிழையான முடிவுகளை எடுக்காமலிருக்க உளவள ஆறுதல் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. 024 324 4444 என்னும் தொலைபேசி இலக்கத்தையும் அவர்கள் அறிமுகம் செய்துள்ளனர்.

அரசியல், மத சார்பு அற்ற அமைப்பாக இயங்கும் இந்த அமைப்பானதுபலபொதுஅமைப்புக்களை இணைத்துசெயற்பட்டு வருகிறது.

அத்துடன் வவுனியாவில் தொண்டராகச் சேர்ந்து சேவையாற்ற விரும்புவோரை உள்வாங்கக் காத்திருக்கிறது என்று கூறப்பட்டது.

தொண்டர்களுக்கான இலவச பயிற்சி வகுப்புக்கள் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. தொண்டராக இணைய விரும்புவோர் 077 4409313 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (ஐ-100)

# திருநெல்வேலி சாயி நிலையத்தில் நாளை மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.18

பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் மகளிர் தின நிகழ்வுகள் சத்தியசாயி சேவா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சேர்.பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள நிலையத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் 'பெண்ணின் பெருமை' எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவை யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சண்முக யோகினி ரவீந்திரன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து நிலைய மகளிரின் 'காலனை வென்ற காரிகை' என்ற நாடகமும், 'பெண்ணின் பெருமை' வில்லுப்பாட்டு நிகழ்வும் இடம்பெறும். (இ-7)

# யாழ். பல்கலையில் நாளை வர்ண இரவு

யாழ்ப்பாணம், நவ.18

யாழ். பல்கலைக்கழகத்தின் விளையாட்டுக் கவுன்ஸிலும் உடற்கல்விப்பிரிவும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 'வர்ண இரவு - 2015' நிகழ்வு நாளை சனிக் கிழமை பிற்பகல் 2 மணி முதல் யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் கூவர் அரங்கில் இடம்பெறும்.


பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் விசேட விருந்தினராக இலங் கை தேசிய வலைப்பந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் தர்ஜினி சிவலிங்கமும் கலந்துகொள்வர்.

இந்த வர்ண இரவு கடந்த மாதம் நடத்துவதற்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கொக்குவில், குளப்பிட்டிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அது அப்போது ஒத்தி வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நாளை

19.11.2016
சனிக்கிழமை
திதி : பஞ்சமி முற்பகல் 10.05 வரை
நட்சத்திரம் : புனர்பூசம்
மு.ப. 10.53 வரை
சுபநேரம் 03.09 – 04.39
இராகுகாலம் 9.09 – 10.39

# வெளிநாட்டுக் குடியிருப்பாக இலங்கையை மாற்ற முயற்சி



## நாடாளுமன்றில் மஹிந்த சீற்றம்

கொழும்பு,நவ.18

அம்பாந்தோட்டை, திருகோணமலை பிரதேசங்களில் பெருந்தொகைக் காணியை வெளிநாட்டவருக்கு விற்று இலங்கையை வெளிநாட்டவர் குடியிருப்பாக மாற்றும் ஆபத்தான திட்டத்துக்கு அரசு தயாராகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

மஹிந்த மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சம்பிரதாய ஐ.தே.க. வரவு-செலவுத் திட்டமே இம்முறையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த கால கடன் சுமையைக் காரணங்காட்டி மக்கள் மீது சுமையேற்றப்பட்டுள்ளது.

2002 இல் ஐ.தே.க. ஆட்சியில் வெளிநாட்டவருக்கு எமது காணிகள் விற்கப்பட்டன. 20 வீதம் வற் வரி உயர்த்தப்பட்டது, 3 லட்சம் அரச ஊழியர் தொகை குறைக்கப்பட்டது. 80 அரச நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டன.

1977 இல் 68.8 வீதமாக இருந்த கடன் சுமை 1994 இல் 95 வீதமாக உயர்ந்தது. சந்திரிகா ஆட்சியில் இது 100 வீதமாக உயர்ந்தது. 2002 - 2004 ஆட்சியில் இது 102 வீதமாக அதிகரித்தது. எமது 2009 -2015 ஆட்சியில் இது 70.7 வீதமாகக் குறைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்துக்கு உள்ள நிதி தொடர்பான அதிகாரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டது. நிதிச் சபையின் அனுமதியின்றி நிதி தொடர்பான அதிகாரத்தைத் தனியார் துறைக்கு வழங்க அரசு தயாராகிறது. இது தவிர துறைமுகம், நெடுஞ்சாலைகள் ரயில் பாதை, மொரகஹகந்த நீர்த்தேக்கம் என்பவற்றையும் தனியாருக்கு வழங்கக் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குச் சுதந்திர கட்சியில் உள்ள சிலரும் பங்குதாரராக இருப்பது நாட்டுக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கியமாகும்.

2014 இறுதியில் 73.91 பில்லியனாக இருந்த கடன் தொகை தற்போது 90.6 பில்லியனாக அதிகரித்துள்ளது. எனது ஆட்சியில் அதிக கடன் பெறப்பட்டது என்ற குற்றச் சாட்டாலும் நீங்களே இன்று குற்றவாளிக் கூண்டில் இருக்கிறீர்கள். நாம் பெற்ற சில கடன்கள் கணக்குகளில் சேர்க்கப்படவில்லை என்று குற்றஞ்சுமத்தப்பட்டது. அந்தப் பணம் எதற்குப் பயன்படுத்தப்பட்டது என்று முடிந்தால் வெளிப்படுத்துங்கள். ஒப்பந்தம் செய்து கொள்ளப்படாது பெற்ற கடன்களை மீளச்செலுத்தத் தேவையில்லை.

கடந்த 2 வருட காலத்தில் கடன் சுமை உயர்ந்துள்ள போதும் ஒரு திட்டம் கூட முன்னெடுக்கப்படவில்லை. சீனாவில் இருந்து பெறும் கடனுக்கான வட்டி அதிகம் எனக் கூறி அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சர் ஒருவர் சீனத் தூதுவருடன் மோதலில் ஈடுபட்டார். இது இரண்டாம் வகுப்பு பயிலும் மாணவரின் செயல் போலவே உள்ளது.

எமது ஆட்சியில் தங்கத்திலா நெடுஞ்சாலைகள் போடப்படுகின்றன என்று கேள்வி கேட்டார்கள். அப்படியானால் இன்று பிளாட்டினத்திலா போடப்படப்போகின்றன என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். சீனாவுடனான உறவில் விரிசல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 1200 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

15 ஆயிரம் காணியைத் தனியார் துறைக்கு உரித்துரிமைக்கு வழங்குவது எவ்வளவு நியாயமானது. நாடு முழுவதுமாக 12 முதலீட்டு வலயங்கள் உள்ளன. இவை பூர்த்தி செய்யப்படாத நிலையில் தனி ஒரு கம்பனிக்குத் துறைமுகம், விமான நிலையம் மற்றும் 15 ஆயிரம் ஏக்கர் காணி என்பன வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது நாட்டின் இறைமைக்குப் பாதகமானதாகும். இது தவிர திருகோணமலை எரிபொருள் களஞ்சிய பிரதேசத்தையும் வெளிநாட்டுக்கு வழங்க அரசு தயாராகிறது.

தேசிய சொத்துக்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பதை அனுமதிக்க முடியாது. அம்பாந்தோட்டையின் 15 ஆயிரம் ஏக்கர் காணியை விற்பனை செய்ய மக்கள் இடமளிக்க மாட்டார்கள்.

இந்த வரவு-செலவுத் திட்டம் வெளிநாடுகளுக்கே ஊக்குவிப்பு வழங்கியுள்ளது. இலங்கையை வெளிநாட்டுக் குடியிருப்பாக மாற்றும் பயங்கரமான நடவடிக்கைக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



ரயில்வேத் திணைக்களத்துக்குத் தற்காலிக ஊழியர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட 2000 இற்கும் அதிகமானவர்களை, ஒரு வருடமாகியும் நிரந்தரமாக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ரயில்வே ஊழியர்களின் ஒன்றியம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. (ஐ)

## குற்றங்கள் மீதான நடவடிக்கைகளில் பொலிஸார் விரைந்து செயற்படவேண்டும்

### உத்தரவுக்காகக் காத்திருக்க வேண்டாம் என்கிறார் முஜிபுர் ரஹ்மான்



நாட்டில் சட்டத்தை நடைமுறைப்படுத்த பொலிஸார் அரசியல் வாதிகளின் உத்தரவு வரும்வரை காத்திருக்க வேண்டியதில்லை. குற்றங்கள் நடைபெறும் போது உடனடியான சட்ட நடவடிக்கையை மேற்காள்ள வேண்டியதே பொலிஸாரின் கடமையாகும்.

- இவ்வாறு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

வெறுப்பு பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட டான் பிரியசாந்த் கைது செய்யப்பட்டமைக்காக தௌஹீத் ஜமா அத்தின் செயலாளரைக் கைது செய்யவேண்டும் என்ற தேவை கிடையாது. யார் குற்றமிழைத்தாலும் அவர்களுக்கு எதிராக உடனடியாக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொலை அச்சுறுத்தல் விடுதல், ஓர் இனத்தை அழிப்பதாக சூளுரைத்தல், நாட்டில் இரத்த ஆறு ஓடவிடுவேன் என்றவாறு பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் வெறுப்புப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றார்.

இவர் பெரும்பான்மை சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர். இவரை மக்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. இதனால் தான் தோல்வியடைந்தவர்.

ஆனால் இவர் முஸ்லிம், தமிழ் மக்கள் மீது வெறுப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டுத் தனது இலக்கை நோக்கி முன்னோக்கிச் செல்கிறார். இவரின் செயற்பாடுகள் நாட்டின் சட்டத்துக்கு முரணானவையாக அமைந்திருக்கிறது. எனவே, இவருக்கு எதிராகத் தண்டனைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆனால் பொலிஸார் ஜனாதிபதி அல்லது பிரதமரின் உத்தரவு வரும் வரை காத்துக்கொண்டிருக்கின்றனர். அல்லது அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்கும் வரை பொழுது போக்காக இருக்கின்றனர்.

சாதாரண மக்களின் திருட்டுச் சம்பவங்களுக்கும் சண்டைகளுக்கும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதுபோல் பொலிஸார் சுயாதீனமாக இயங்கவேண்டும்.

இனவாதச்செயற்பாடுகளிலும் வெறுப்பு பிரசார வேலைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சுயமாக இயங்கி நடவடிக்கையை மேற்கொள் வேண்டும். அப்போதுதான் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல முடியும்.

அத்துடன் டான் பிரியசாந்த் கைது செய்யப்பட்டமையால் தௌஹீத் ஜமா அத்தின் செயலாளர் கைது செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு நடக்காவிடின் நாட்டில் இரத்த ஆறு ஓடும் என்றும் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கூறியிருக்கின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது.

டான் பிரசாத் வெறுப்பு பிரசாரத்தில் ஈடுபட்டமையால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுக்குமாறே நாம் பொலிஸாருக்கு அழுத்தம் பிரயோகித்தோம். அப்துர்ராசிக் சட்டத்தை மீறியிருப்பின் அவரையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். டான் பிரியசாத் கைதானமையால் அப்துர்ராசிக் கைது செய்யப்பட வேண்டும் என்ற கூற்று வேடிக்கையானது. சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும்.- என்றார். (ஐ)

### ஆன்மீக நிகழ்வு நாளை

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலையின் பாட்டுப் பேரவைசந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாரந்தஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கந்தபுராணம் தொடர்சொற்பொழிவு இடம்பெறும். இத் தொடர்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (ஐ-30)

### செல்வச்சந்நிதியில் திருக்கல்யாணம்

வரலாற்றுச் சிறப்புமிக்கதொண்டைமனாறு செல்வச் சந்நிதிகோவில் முருகப் பெருமான் வள்ளியம்மன் திருக்கல்யாணத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை விசேட அபிசேக பூசை இடம் பெற்று வள்ளி யம்மை திருமணப் புராணப் படிப்பு ஆரம்பமாகும். மாலை 6.15 மணிக்கு திருக் கல்யாணத் திருவிழாஇடம் பெற்று முருகப் பெருமான் வீதிவலம் வந்து கந்தபுராண படனத்துடன் திருவிழா நிறைவுபெறும். (ஐ-30)

### பெண்களைக் கடத்திய இருவர் கைதாகினர்!

மாலைதீவுக்குப் பெண்களைக் கடத்திய 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பத்தரமுல்லயில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்குக் கிடைத்த தகவலுக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நூற்றுக்கும் அதிகமான பெண்கள் மாலைதீவுக்கு கடத்தியமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் கடுவல நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். இதன்போது, எதிர்வரும் 21ஆம் திகதி வரை அவர் களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# அம்பாறை, மட்டக்களப்பில் கடும் மழை; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



மட்டக்களப்பு, நவ.17

அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து கடும் மழை பெய்து வருவதால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், திருக்கோவில், லகுகல, பாணமை, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மருதமுனை ஆகிய பிரதேசங்களில் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகிறது.

இதனால் அப்பிரதேசங்களிலுள்ள தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது. அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில், நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணி வரை 42.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக பொத்துவில் வானிலை அவதான நிலைய அதிகாரி எம்.ஐ.ஏ. நஹீம் தெரிவித்தார்.

கடும்மழை காரணமாக அட்டாளைச்சேனை 10 ஆம் பிரிவிலுள்ள தாழ்நிலப் பகுதிகளிலுள்ள குடியிருப்புகள், வயல்கள், வீதிகள், கால்வாய்கள் என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மேலும், கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் அதிகமான மீனவர்கள் தொழிலுக்காகக் கடலுக்குச் செல்லவில்லை. இதனால், இம்மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களில் 100.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எம்.சூரியகுமார் தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து மழையுடன் கூடிய காலநிலை ஒருவாரத்துக்கு நீடிக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (சு)

## விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் சாவு

ஏறாவூர் நகரில் இடம் பெற்ற வீதி விபத்தில் படுகாயமுற்று மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இறந்து விட்டார் என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.

கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் ஏறாவூர் நகரசபைக்கு அருகில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டபோது இந்த விபத்து இடம்பெற்றிருந்தது.

ஹோட்டல் உரிமையாளரான காத்தான்குடி 6 ஐச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆதம்லெப்பை முஹம்மது ஷாஜஹான் (வயது 39) என்பவரே இறந்தவர் ஆவார்.

இவர் படுகாயமடைந்த நிலையில் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் முன்னதாக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சு)

# புற்றுநோய் சத்திர சிகிச்சை கூடம்; நேற்று முதல் சிகிச்சைகள் ஆரம்பம்

மட்டு.போதனா வைத்தியசாலையில்



மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்று நோயியல் பிரிவுக்காக அமைக்கப்பட்ட நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் புற்றுநோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் நடவடிக்கை நேற்று வியாழக் கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப் பாளர் எம்.எஸ்.இப்றா லெப்பை தெரிவித்தார். சுகாதார அமைச்சின் 3 கோடி ரூபா நிதி உதவியுடன் கிழக்கு மாகாணத்தின் முதலாவது நவீன சத்திரசிகிச்சைக்கூடம் இவ் வைத் தியசாலையில் அமைக்கப்பட் டுள்ளது.

இலங்கையில் கொழும்பு, கண்டி மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலேயே இத்தகைய நவீன வசதிகொண்ட சத்திரசிகிச்சைக் கூடங்கள் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது (சு)

*சத்துருக் கொண்டான் வாவியில்*

# தடைசெய்யப்பட்ட வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபட்ட அறுவர் கைது

மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் வாவியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மீனவர்கள் 6 பேர் நேற்று வியாழக் கிழமை காலை கைது செய்யப் பட்டனர் என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் பரிசோத கர் த. பாலமுகுந்தன் தெரிவித்தார்

இந்த வாவியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கை இடம்பெறுவதாக தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து, அங்கு சென்று சோதனை மேற்கொண்டபோது, குறித்த மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டமை தெரிய வந்தது.

இந்நிலையில், குறித்த மீனவர்களைக் கைது செய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான தடைசெய்யப்பட்ட வலைகளையும் சுமார் 50 கிலோ மீன்களையும் கைப்பற்றினோம்.

இந்த அறுவரும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்றார் அவர்.(இ-சு)

## விபத்தில் நேற்று சிப்பாய் பலி

திருகோணமலை, நவ.18

திருகோணமலை புத்தளம் பிரதான வீதியின் 10ஆம் கட்டைப் பகுதியில், நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரா ணுவ வாகனம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானபோதே இராணுவ சிப்பாய் உயிரிழந்துள்ளார். மேலும் சிப்பாய்கள் மூவர் படுகாயம் அடைந்துள்ளனர். (சு)

# ஊடகவியலாளர் மீது தாக்குதல் முயற்சி

திருகோணமலை, நவ.18

திருகோணமலையில் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் உள்ள கடைகளை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பரிசோதனைக்குட்படுத்தியபோது அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது தாக்குதல் முயற்சி மற்றும் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற வீதியில் வசித்து வரும் ஏ.எம். கீத் என்பவரே முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது;

கிழக்கு மாகாண பிராந்திய சுகாதார பிரதிப்பணிப்பாளர் அ.லதாகரன் தலைமையிலான பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை உணவகங்களை பரிசோதனை செய்தனர். அப்போது அங்கு செய்தி சேகரிப் பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் மீது உணவகத்தில் வேலை செய்த ஊழியர்கள் தாக்குதல் நடத்த முற்பட்டனர். அத்துடன் அன்று இரவு இனந் தெரியாத நபர்கள் சிலர் வீட்டை நோக்கி கல் வீசித் தாக்குதல் நடத்தினர் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## மகரஜோதி மணிகண்ட சபரி யாத்திரைக்கான விரதம் ஆரம்பம்



ஐயப்பனின் மிக முக்கிய விரதமான மகரஜோதி மணி கண்ட சபரி யாத்திரைக்கான விரதம் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமானது.

அந்த வகையில் மட்டக் களப்பு மாமாங்கம் விக்னேஸ்வரா திருத்தொண்டர் நிலையத் தில் சபரி மணிகண்ட ஐயப்ப யாத்திரைக் குழுவின் ஏற்பாட்டில் மாலை அணிவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

சபரி மணிகண்ட ஐயப்ப யாத் திரைக்குழுவின் குருசாமி நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த விரத ஆரம்ப நிகழ்வை கதாபிரசங்க சக்கரவர்த்தி சிவயோகச் செல்வன் சாம்பசிவ சிவாச்சாரியார் நடத்தி வைத்தார்.


தொடர்ந்தும் 18 தினங்கள் நடைபெறவுள்ள இந்த விரத நிகழ்வில் தினமும் பஜனையுடன் கூடிய வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

மேலும் இலங்கையிலிருந்து சபரிமலை செல்லும் அடியார்களின் விரதம் ஆரம்பிக்கும் வகையில் மாலை அணியும் நிகழ்வு இலங்கையில் பல பாகங்களிலும் நடைபெறுகின்றமை குறிப்பிடத் தக்கது. (சு)

## ரி.ஐ.டி. மற்றும் சி.ஐ.டிக்கும் பொறுப்பாகவிருந்த

# முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரை ஜெனீவாவில் குடைந்தது ஐ.நா.குழு!

## ஆனால் கடைசிவரை பதிலளிக்காது மௌனம் காத்துத் தப்பினார் அவர்



ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா.வின் முக்கிய குழுக் கூட்டம் ஒன்றில் இலங்கைப் பிரதிநிதியாகக்கலந்துகொண்டமுன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் சிசிர மெண்டிஸை, ஐ.நா. விசாரணைப் பிரதிநிதிகள் பிய்த்து, உதறிக் கேள்வி கேட்டுத் துளைத்தெடுத்தனர். ஆனால், அக்கேள்விகள் எதற்கும் பதிலளிக்காமலேயே மௌனம் காத்துத் தப்பிக் கொண்டார் அவர்.

சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. குழுவின் 59 ஆவது கூட்டத் தொடர் ஜெனீவாவில் நடைபெற்று வருவது தெரிந்ததே.

அதில் கடந்த செவ்வாயும், புதனும் இலங்கை நிலைமை குறித்து பரிசீலனை செய்யப்பட்டது.

அச்சமயம் இலங்கை அரசின் சார்பில் பதிலளிக்கச் சென்றிருந்த குழுவில் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் சிசிர மெண்டிஸும் இடம்பெற்றிருந்தார். அவரிடமே கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் - 2008, 2009 ஆம் ஆண்டுகளில் - இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, குற்றப் புலனாய்வுப்பிரிவு ஆகியவற்றுக்குப் பொறுப்பாக இருந்த பிரதி பொலிஸ்மா அதிபர் இவரே.

அக்கால கட்டத்தில் மேற்படி இரு பிரிவுகளாலும் பல்வேறு சித்திரவதைகள் இழைக்கப்பட்டன என்று கூறப்படும் நிலையிலேயே அது குறித்து மேற்படி கூட்டத்தில் அவர் வறுத்தெடுக்கப்பட்டார்.

மேற்படி பிரிவுகளுக்குப் பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர், நேரடியாக இலங்கைக் குழுவில் பிரசன்னமாகியிருப்பது, அவ்வேளையில் அப்பிரிவினால் இழைக்கப்பட்டவை எனக் கூறப்படும் குற்றங்கள் குறித்துக் கேட்டறியவும், அவை தொடர்பில் இலங்கை அரசின் விளக்கத்தைத் தெளிவுபடுத்திக்கொள்ளவும் நல்ல வாய்ப்பு என்ற பீடிகையுடன் ஐ.நா. குழுவின் சார்பில் கேள்விக் கணைகள் இரண்டு நாள்களும் தொடர்ந்து முன்வைக்கப்பட்டன.

புதன்கிழமையன்று இலங்கை தொடர்பாக இரண்டாவது நாள் கலந்துரையாடல் ஆரம்பித்த போது, அதற்கு முதல் நாள் ஐ.நா. அதிகாரிகளினால் இலங்கைக்கு அங்கு இடம் பெற்ற, இடம்பெற்றுவரும் சித்திரவதைகள் குறித்து விடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் உதவித் தலைவர் பெலிஸ் கெயார் அம்மையார் செவ்வாயன்று சீ.ஐ.டி. மற்றும் ரீ.ஐ.டி. போன்ற அமைப்புக்களுக்கு முன்னர் பொறுப்பாகவிருந்த சிசிர மெண்டிஸிடம் மெனிக் முகாம் பிரதேசத்தில் அமைந்திருந்த சித்திரவதை முகாம், ஆட்கடத்தல், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற விடயங்கள் குறித்தும், அதில் அவருக்குண்டான நேரடி, மறைமுகத் தொடர்புகள் குறித்தும் பதிலளிக்கும்படி கேட்டார்.

அன்றைய தினம் தான் கேட்ட முக்கியமான கேள்விகளுக்குப் பதிலளிக்காது வேறு கேள்விகளுக்கும், சட்டத்திருத்தங்கள் குறித்துமே இலங்கைத் தூதுக்குழு பதிலளித்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய பெலிஸ் கெயார் அம்மையார், சிசிர மெண்டிஸ் அங்கு இரண்டு நாள்களும் நேரில் பிரசன்னமாகியிருக்கின்ற போதிலும் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்காது இருந்தமை குறித்து விசனம் வெளியிட்டார்.

சித்திரவதை இடம்பெறும் வேளைகளில், இராணுவத்தினருடன், சி.ஐ.டி, ரீ.ஐ.டி உறுப்பினர்களுடன், நீங்களும் இருந்தீர்களா? இது குறித்து விளக்கமளிக்கமுடியுமா?. மெனிக் முகாம் பகுதியிலும், வவுனியா வைத்தியசாலைப் பகுதிகளிலும் வகைதொகையின்றி நபர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள், சித்திரவதைக்கும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி உங்களுக்கு என்ன தெரியும்? இவை குறித்த பதிவேடுகள், தரவுகள் உங்களிடம் இருக்கின்றனவா? என்பன போன்ற கேள்விகள் சிசிர மெண்டிஸிடம் சரமாரியாகத் தொடுக்கப்பட்டன.

அத்துடன் சிசிர மெண்டிஸ் சித்திரவதைகள், கடத்தல்கள், தடுப்புக்காவலின்போது பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றமை குறித்த கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

ஆனாலும், இலங்கை சட்ட மா அதிபரும், ஏனைய அதிகாரிகளும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஏனைய விடயங்கள் குறித்துப் பதிலளிப்பதில் காலத்தை விரயம் செய்து, சிசிர மெண்டிஸை பதிலளிக்காத வண்ணம் பாதுகாத்தனர். ஆனாலும் சிசிர மெண்டிஸ் பதிலளிப்பதற்கு வசதியாக மேலும் ஐந்து நிமிடங்கள் இடைவேளை வழங்கப்பட்டது. ஆனாலும் மீண்டும் தொடர் ஆரம்பமான போது, ஏனைய அதிகாரிகளே வேறு விடயங்கள் குறித்தும் சட்டவாக்கங்கள் குறித்தும் பதிலளித்தனரே தவிர, சிசிர மெண்டிஸ் கடைசி வரை பதிலளிக்காது இருந்தார்.



இறுதிவரை சிசிர மெண்டிஸ் பதிலளிக்காதமை குறித்து நிகழ்விற்குத் தலைமை தாங்கிய ஐ.நா. அதிகாரிகள் சுட்டிக் காட்டியதோடு அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் இலங்கையினால் எழுத்து மூலம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற அறிக்கையில், இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் வழங்கப்படும் என்று தாங்கள் நம்புகின்றார்கள் என்ற தமது எதிர்பார்ப்பையும் அவர்கள் அங்கு வெளியிட்டனர்.

---

### வசீம் தாஜுதீன் கொலை வழக்கு கால நீடிப்பு

பிரபல ரகர் வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக மஜிஸ்ட்ரேட் நிஷாந்த பீரிஸ் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

தாஜுதீனின் மரணம் இடம் பெறுவதற்கு ஒரு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் தனது நண்பருக்கு தாஜுதீன் எடுத்த அழைப்புக்கள் தொடர்பில் தற்பொழுது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதன்போது, தாஜுதீனின் மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஆகியோரே மீண்டும் விளக்க மறி யலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

# முசலி மீனவர் பிரச்சினை சுமுக நிலைக்கு வந்தது

### *மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீரவுடனான கலந்துரையாடலை அடுத்து*

மன்னார், நவ.18

மன்னார் சிலாபத்துறை பகுதியில் குறிப்பிட்ட வெளி மாவட்ட மீனவர்கள் வழமைபோன்று பருவ காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் புதிய இடங்களை ஆக்கிரமித்து மீன்பிடியில் ஈடுபடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

மன்னார் மாவட்ட மீனவ சமூக பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர். இதனை அடுத்து சுமுக நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. என்று முசலி பகுதி மீனவர் கூட்டுறவு சங்கத் தலைவர் கே.எஸ்.எவ்.கபீர் மற்றும் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் என்.எம்.ஆலம் ஆகியோர் தெரிவித்தனர்.

மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவில் சிலாபத்துறை பகுதியில் காயாக்குழி என்னும் இடத்தில் தென்னிலங்கை மீனவர்கள் குடியேறி மீன்பிடியில் ஈடுபடுவதற்கான செயல்பாடுகள் இடம் பெற்றன. தொடர்ந்து இப்பகுதியில் இரு சமூகங்களுக்கிடையே சமாதான சீர்குலைவு ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் தென்பட்டன.

இந்நிலை ஏற்படாதிருக்கும் முகமாகச் சிலாபத்துறை பொலிஸார் சட்டரீதியான நடவடிக்கைகளும் மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் அரசியல் தலைவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து நேற்று முன்தினம் புதன் கிழமை கொழும்பில் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சில் இவ்விடயம் சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றது.

மீன்பிடி மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர கலந்து கொண்ட இக் கூட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மஸ்தான், சாள்ஸ்நிர்மலநாதன், வடமாகாண சபை உறுப்பினர் எச்.எம்.றயீஸ், முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் உனைஷா பாறூக் உட்பட மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கத் தலைவர் என்.எம்.ஆலம், முசலி மீனவர் கூட்டுறவு சங்க தலைவர் கே.எஸ்.எவ்.கபீர், மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பி.எஸ்.மிராண்டா, மாவட்ட கிராமிய மீனவ சம்மேளன தலைவர் யஸ்ரின் சொய்சா ஆகியோருடன் அமைச்சின் அதிகாரிகள் மீனவ சமூக பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்

இது விடயமாக முசலி பகுதி மீனவர் கூட்டுறவு சங்கத்தலைவர் கே.எஸ்.எவ்.கபீர் மற்றும் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் என்.எம். ஆலமும் ஊடகத்துக்கு கருத்து தெரிவிக்கையில்;


எங்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை அமைச்சர் உன்னிப்பாகக் கேட்டு அறிந்ததுடன் எங்கள் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டார்.

அதாவது கடந்த காலத்தில் தென் பகுதி குறிப்பிட்ட மீனவர்கள் சிலாபத்துறைக்கு வந்து தங்கியிருந்து பருவ காலத்தில் மீன்பிடியில் ஈடுபட்டபின் அவர்கள் திரும்பி விடுவர். இவ்வாறு அவர்கள் குறிப்பிட்ட இடத்திலிருந்து தொழில் செய்வார்களானால் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தோம்.

அதைவிடுத்து புதியவர்கள் வந்து எங்கள் இடங்களை ஆக்கிரமித்து குடியேறிக் கொண்டு மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்க மாட்டோம் என தெரிவித்தோம். இவ் விடயம் ஏற்றுக் கொள்ளப் பட்டது என்று தெரிவித்தனர்.

(ஐ-112)








முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பிரதேச செயலகங்களின் கீழ் செயற்படும் இளைஞர் கழகங்களுக்கான வதிவிட முகாம் தலைமைத்துவ பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன. இதனடிப்படையில் தேசிய ரீதியில் 334 பிரதேச செயலகங்களின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக 600 இளைஞர் - யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் ஒட்டுசுட்டான் பிரதேச இளைஞர்களுக்காக மூன்று நாள்கள் கொண்ட இப்பயிற்சி நெறி கடந்த 11,12,13 ஆம் திகதிகளில் மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இளைஞர் சேவை அதிகாரி மா.சசிக்குமார் தலைமையில் நடைபெற்றது. இதேவேளை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிறு வரை 3 நாள்கள் மணலாறு பிரதேச செயலக இளைஞர் யுவதிகளுக்கான வதிவிட முகாம் பயிற்சிகள் நடைபெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (இ-10)

# வவுனியா பாடசாலைகளுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

## வடக்கு சுகாதார அமைச்சர் வழங்கினார்



சிறுவயதில் இருந்தே மாணவர்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பருகுவதை ஊக்குவித்தல் திட்டத்தின்கீழ் நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதிகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியா, வீரபுரம், அரசடிக்குளம் அ.த.க பாடசாலை, பெரிய புளியாலங்குளம், கக்காயரங்குளம் இளங்கோ வித்தியாலயம், அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயம் மற்றும் முதலியார்குளம் றோ.க.பாடசாலை என்பவற்றுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் 2016 ஆண் டுக்கான நிதியில் இருந்து நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் அந்தப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அவற்றை சம்பிரதாயபூர்வமாக மாணவர்களிடம் கையளித்தார்.

இதன்போது அமைச்சரின் இணைப்பாளர் பாலச்சந்திரன் சிந்துஜன், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சிறுநீரக பாதிப்பின் தாக்கம் அதிகம் கொண்ட பிரதேசம் எனும் வகையில் 'சிறுவயதிலிருந்தே மாணவர்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பருகுதலை ஊக்கு வித்தல்' என்னும் அமைச்சரின் விசேட செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக அமைச்சரின் நிதியில் இருந்து இவை வழங்கப்பட்டுள்ளன.

# 'ரெலிக்கொம்' கார் ரயர் வெடித்து விபத்து



வவுனியா.நவ.18

வவுனியா, தாண்டிக்குளம் ரயில்வே நிலையத்துக்கு அருகில் பயணித்த ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துக்குச் சொந்தமான காரின் ரயர் திடீரென வெடித்தது. அதை அடுத்து கட்டுப்பாட்டை இழந்த அந்தக் கார் மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி வந்த ரெலிகொம் கார் வவுனியா, ஏ9 வீதி, தாண்டிக்குளம் பகுதியில் பயணித்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இவ் விபத்துச் சம்பவத்தில் காரைச் செலுத்திச் சென்ற சாரதி சிறு காயங்களுக்கு ஆளானார். சம்பவ இடத்துக்கு வருகை தந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-100)

# முதிரை மரக் குற்றிகளை மீட்டுள்ளனர் பொலிஸார்

## சட்டவிரோதமாக வெட்டப்பட்டவையாம்!

கிளிநொச்சி, நவ.18

கிளிநொச்சியில் சட்டவிரோதமாக வெட்டிக் கொண்டு செல்ல முயற்சிக்கப்பட்ட 43 முதிரை மரக்குற்றிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மணியங்குளம் காட்டுப் பகுதியில் இந்த மரக்குற்றிகள் வெட்டப்பட்டுள்ளன.

பொலிஸாரின் தேடுதல் நடவடிக்கையின்போது நேற்று அதிகாலை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.


சட்ட விரோதமாக வெட்டப்பட்ட 43 முதிரை மரக்குற்றிகளையும், கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்ட லொறியின் சாரதியையும் கைது செய்துள்ளனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளை லொறியுடன், நீதிமன்றில் பாரப்படுத்தியதுடன் சந்தேகநபர்களையும் நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ஐ)

# கிளிநொச்சி கனகாம்பிகைக்கு புதிய நூலகக் கட்டடம் கையளிப்பு







கிளிநொச்சி கனகாம்பிகை அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலைக்கு புதிய நூலகக் கட்டடம் அமைக்கப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றது. செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் ஏழு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி படையினரின் மனித வலுவைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட நூலக கட்டடமே மாணவர்களின் பயன்பாட்டுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி 57 ஆவது படைப் பிரிப்பின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் அநுர சுபசிங்க மற்றும் கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் முறைசார் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.பேரின்பராசா, பாடசாலையின் அதிபர் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-70)

காலைக்கதிர்
Kalaikkathir







சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஓவியக் கண்காட்சி கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பொது மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு நிலை அதிபர் சண்.வாமதேவன் கண்காட்சி மண்டபத்தை நாடா வெட்டித் திறந்து வைக்கிறார். கவிஞர் சோ.பத்மநாதன் உரையாற்றுகிறார். மாணவர்கள் அமர்ந்துள்ளனர். (ஐ–9)




'மனப்பட மனிதர்கள்' சிறுகதை நூல் வெளியீட்டு விழா கடந்த 13 ஆம் திகதி வல்வெட்டித்துறை இ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். வட மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் நூலை வெளியிட்டு வைக்க இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன் பெற்றுக் கொள்கிறார். (ஐ–40)






பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதியான, கிளிநொச்சியைச்சேர்ந்த விவேகானந்தனூர் சதீஷ் எழுதிய 'விடியலைத் தேடும் இரவுகள்' கவிதை நூலின் வெளியீட்டு விழாவும், 'இரும்புக் கதவுக்குள் இருந்து' கவிதை நூல் அறிமுகவிழாவும் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி கூட்டுறவுக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.
இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் ப.சத்தியமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடமாகாண போக்குவரத்து மீன்பிடித் துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, பா.அரியரட்ணம் கே.சயந்தன், ச.சுகிர்தன், ஐய்யூப் அஸ்மின் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர். நிகழ்வில் சில காட்சிகள். (இ–10)




சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் எழுதிய 'சமய வாழ்வியல்' என்ற கட்டுரைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா கடந்த 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்றது.
கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ. கரு[illegible]லிங்கமும் கலந்து கொண்டனர். நிகழ்வில் ஆசியுரைகளை சின்மயாமின் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச் சாரி ஜாக்கிரத் சைத்தன்யா, குப்பிளான் கற்பக விநாயகர் ஆலய முன்னாள் குரு சிவஸ்ரீ சி.குமாரராஜக் குருக்கள் ஆகியோர் வழங்கினர். வரவேற்புரையை கலாசாலை விரிவுரையாளர் ஜானகி தர்மஜீலனும், பாராட்டுரையை விரிவுரையாளர் கு.பாலசண்முகனும், வெளியீட்டுரையை யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கமும் நயப்புரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் ஆற்றினர். நிகழ்வின் சில காட்சிகள் (ஐ–10)

# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

07

பொன்.வேணு கிருஷ்ணா

### டொனால்ட் ட்ரம்ப் ‘ஒரு தடவை சொன்னா ஒன்பது தடவை சொன்ன மாதிரியா?’

அதிபராக விரும்பும் டொனால்ட் ட்ரம்ப் முஸ்லிம்களை அமெரிக்காவுக்குள் விட மாட்டேன் என்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளருக்கான போட்டியில் முன்னணியில் இருக்கும் பொழுது டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவுக்குள் முஸ்லிம்கள் நுழைவதைத் தடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். கலிபோர்



னியாவில் நடந்த துப்பாக்கிச்சூட்டுக் கொலைகளைத் தொடர்ந்து அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

டொனால்ட் ட்ரம்ப் இதுவரை தெரிவித்திருக்கும் இதுபோன்ற சர்ச்சைக்குரிய பத்து முக்கிய கருத்துக்கள் மற்றும் அவரது நம்பிக்கைகள்:

1.அமெரிக்க மசூதிகள் கண்காணிக்கப்படவேண்டும். தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக முஸ்லிம்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படவேண்டும் என்று ட்ரம்ப் நம்புகிறார். இதன் ஒரு பகுதியாக மசூதிகள் கண்காணிக்கப்படுவது அரசியல் ரீதியில் ஏற்கத்தக்கக் கருத்தல்ல என்பதைப் பற்றி அவருக்கு கவலையில்லை.

2. இஸ்லாமிய அரசு என்று தன்னை அழைத்துக்கொள்ளும் அமைப்புக்கு எதிரான சண்டையில் ஓர் அங்கமாக சந்தேக நபர்களை நீரில் மூழ்கடித்து சித்திரவதை செய்வது உள்ளிட்ட பல்வேறு கடுமையான விசாரணை முறைகளையும் அமெரிக்க அரசு கையாள வேண்டும். சிரமறுத்துக் கொலை செய்வது உள்ளிட்ட தீவிரவாதிகளின் அணுகுமுறைகளோடு ஒப்பிடும் போது இந்த முறைகளெல்லாம் ஒண்ணுமேயில்லை என்கிறார் அடுத்த அமெரிக்க ஜனாதிபதியாகும் டொனால்ட் ட்ரம்ப்.

3.ஐ.எஸ். அமைப்பை குண்டுபோட்டு அடித்து துவைத்து விடுவேன் என்கிறார் ட்ரம்ப். இந்த விடயத்தில் மற்ற எந்த வேட்பாளரும் தன் அளவுக்கு வலிமையுடனும் உறுதியுடனும் கடினமாகவும் இருக்க மாட்டார்கள் என்று கூறும் இவர், ஐ.எஸ். அமைப்புக்கும் பெற்றோலிய எண்ணெய்க்குமான தொடர்பைத் துண்டிப்பதன் மூலம் அவர்களைப் பலவீனப்படுத்துவேன் என்றும் கூறுகிறார்.

4. அமெரிக்காவுக்கும் மெக்சிகோவுக்கும் இடையில் மிகப்பிரம்மாண்டமானதொரு மதிற்சுவர் எழுப்புவேன் என்று கூறும் ட்ரம்ப், இதன் மூலம் சட்டவிரோதக் குடியேறிகளையும் சிரிய குடியேறிகளையும் தடுத்து நிறுத்துவேன் என்றும் கூறுகிறார். மெக்சிக்கோவில் இருந்து அமெரிக்காவுக்குள் வருபவர்களில் பெரும்பான்மையானவர்கள் கிரிமினல்கள் என்று அவர் குறிப்புணர்த்துகிறார். அவர்கள் போதை மருந்தை கடத்திக் கொண்டு வருகிறார்கள், குற்றங்களைக் கொண்டு வருகிறார்கள், அவர்கள் பாலியல் பலாத்காரம் செய்பவர்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார். அமெரிக்காவுக்கும் மெக்சிகோவுக்கும் இடையிலான சுவர் கட்டுவதற்காகவும் செலவை மெக்சிகோ தரவேண்டும் என்றும் அவர் நம்புகிறார். அவர் கூறும் மாபெரும் சுவர் கட்டுவதற்கு குறைந்தது 220 கோடி அமெரிக்க டாலர்களும் அதிகபட்சம் 1300 கோடி அமெரிக்க டாலர்களும் செலவாகும் என்று பி.பி.ஸியின் ஆய்வில் தெரியவருகிறது.

5.அமெரிக்காவில் வசிப்பதாக கணக்கிடப்பட்டிருக்கும் ஒரு கோடியே பத்துலட்சம் சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்றுவதற்கான மிகப்பெரியதொரு திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று அவர் விரும்புகிறார். இவரது இந்தக் கொள்கை வெளிநாட்டவர் மீதான வெறுப்பை உள்ளடக்கிய பயநோய் என்றும் இவர் கூறும் திட்டத்தை நிறைவேற்ற மிகப்பெரிய பொருட்செலவாகும் என்றும் விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள். இதற்கு 11,400 கோடி அமெரிக்க டாலர்கள் செலவாகும் என்று பி.பி.ஸியின் கணக்கில் தெரியவந்திருக்கிறது. சட்டவிரோத குடியேறிகளின் பிள்ளைகள் அமெரிக்க மண்ணில் பிறந்தால் அந்த பிள்ளைகளுக்கு அமெரிக்கக் குடியுரிமை கிடைக்கும் என்கிற தற்போதைய நடைமுறையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.

6. அதிபர் விளாடிமிர் புடினுடன் சுமுகமாக இருப்பேன் என்கிறார் டொனால்ட் ட்ரம்ப்.


ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன் இணைந்து செயலாற்றப் போவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். தற்போதைய அமெரிக்க அதிபர் ஒபாமாவும் ரஷ்ய அதிபர் புடினும் ஒருவரை ஒருவர் மோசமாக வெறுக்கிறார்கள், அதனால் அவர்களுக்கு இடையில் பேச்சுகள் மூலம் சுமுகமாக இணைந்து செயற்படும் சாத்தியங்கள் இல்லை என்றும் சி.என்.என். செய்திச் சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்திருந்தார். இதற்கு மாறாக, தான் அமெரிக்க அதிபரானால் புடினுடன் நன்கு பழகுவேன் என்றும் அதன் காரணமாக தற்போதைய பல பிரச்சினைகள் தனது ஆட்சிக்காலத்தில் இருக்கவே இருக்காது என்றும் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

7. சீனாவுடனான அமெரிக்க வர்த்தகத்தை சமநிலைக்கு கொண்டுவர வேண்டுமானால், சீனாவுக்கு எதிராக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கருதுகிறார். தான் அமெரிக்க அதி



பரானால் சீனா தனது நாணயத்தின் மதிப்பை குறைத்து வைத்திருப்பதை தடுப்பேன் என்று கூறும் ட்ரம்ப், சுற்றுச்சூழல் மற்றும் தொழிலாளர் நலம் ஆகிய இரண்டு பிரச்சினைகளில் சீன அரசு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கும்படி நிர்ப்பந்திப்பேன் என்றும் கூறினார்.

8. புவி வெப்பமாதல் என்பது சாதாரணமாக பருவநிலையில் ஏற்படும் ஒரு மாற்றம் மட்டுமே என்பது அவரது வாதம். காற்றையும், நீரையும் சுத்தமாக வைத்திருப்பது நல்லது என்று ட்ரம்ப் நம்பினாலும், அதிகரித்த கரியமில வாயு வெளியேற்றத்தால் புவி வேகமாக வெப்பமாகி வரு



கிறது என்கிற சுற்றுச்சூழல் விஞ்ஞானத்தை வெறும் வதந்தி என்று புறந்தள்ளுகிறார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்கிற பெயரில் அமெரிக்கத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகள் சர்வதேசச் சந்தையில் அவற்றை வலுவிழக்கச் செய்துவிடும் என்றும் அவர் அஞ்சுகிறார்.

9. ஈராக்கில் சதாம் ஹுசைனும் லிபியாவில் முகமட் கடாபியும் தொடர்ந்து ஆட்சியில் இருந்திருந்தால் உலகம் இன்னும் கொஞ்சம் நல்லபடியாக இருந்திருக்கும் என்று ட்ரம்ப் கருதுகிறார். சி.என்.என். செய்திச் சேவைக்கு அவர் அளித்த பேட்டியில் மறைந்த அந்த இரண்டு சர்வாதிகாரிகளின் ஆட்சிக்காலங்களில் லிபியாவும் ஈராக்கும் இருந்ததைவிட தற்போது அவை படுமோசமான நிலையில் இருப்பதாக தெரிவித்திருக்கிறார்.

10. ‘உண்மையில் நான் ரொம்ப நல்லவன்’. முடமான அமெரிக்கா என்கிற தனது சமீபத்திய புத்தகத்தில், ‘உண்மையில் நான் ரொம்ப நல்லவன், நம்புங்கள். நான் நல்லவன் என்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன். அதேசமயம் நம் நாட்டை மீண்டும் மிகச்சிறந்த நாடாக மாற்றிக்காட்ட வேண்டும் என்பதில் நான் உறுதியானவனாகவும் ஆழமான நம்பிக்கை கொண்டவனாகவும் இருக்கிறேன்’. என்றும் கூறியிருக்கிறார்.

### தேர்தலில் டிரம்ப் கையாண்ட உத்தி

* ட்ரம்பின் தேர்தல் பயணங்கள் முழுவதிலும் அமெரிக்காவில் அமெரிக்கர்கள் தங்களது உரிமையைப் பெற வேண்டும் என்பதையே தொடர்ந்து தனது வாக்காளர்களிடம் வலியுறுத்தி வந்தார்.

ஏழை அமெரிக்கர்களுக்கு வேலை, வீடு, போதிய சுகாதார வசதிகள் அள்ளித் தரப்படும் என்றார்.

* சட்டங்களின் ஓட்டைகளை அடைத்து, வரிகளைக் குறைக்க வேண்டும் என்றார். இதன் மூலம் அமெரிக்காவில் வேலை வாய்ப்புகள் பெருகும் என்றும் அமெரிக்கர்களிடம் நம்பிக்கை அளித்தார்.

* இரண்டாவதாக அமெரிக்காவுக்கு மக்கள் குடியேறுவதைத் தடுக்க வேண்டும்; குறிப்பாக இஸ்லாமியரையும் ஹிஸ்பானிக்குகளையும் வரவிடக் கூடாது. மெக்ஸிகோ நாட்டிலிருந்து ஆட்கள் நுழைவதைத் தடுக்கச் சுவர் எழுப்ப வேண்டும். மூன்றாவதாக, இஸ்லாமியப் பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்க எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து சர்ச்சை மிக்க கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

* ஈரானுடன் செய்துகொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தைக் கைவிட வேண்டும்; ரஷ்யாவுடன் நட்புகொள்ள வேண்டும் என யாரும் எதிர்பார்க்காத கருத்துகளை தொடர்ந்து தனது தேர்தல் பிரசாரங்களில் ட்ரம்ப் கூறி வந்தார்.

* ஊழல் விவகாரம் தொடர்பாக ஹிலாரியின் நீக்கப்பட்ட ஈ-மெயில் குறித்து தொடர்ந்து தனது தேர்தல் களங்களில் குரல் எழுப்பி வந்தார்.

### சர்ச்சை நாயகன் ட்ரம்ப்


* டொனால்ட் ட்ரம்ப் வருமான வரி கணக்குகளை வெளியிடாமல் தொடர்ந்து மறைத்து வருகிறார் என ஜனநாயகக் கட்சியின் அதிபர் வேட்பாளர் ஹிலாரி தேர்தல் பிரசார மேடைகளில் கேள்வி எழுப்பி வந்தார்.

* அமெரிக்க அதிபர் தேர்தல் நெருங்கிய நாட்களில் ட்ரம்ப்பின் மீது வரிசையாக தொடர்ந்து பெண்கள் பலர் பாலியல் குற்றச்சாட்டுகளை தொடுத்தனர். இந்தக் குற்றச்சாட்டையே ஜனநாயகக் கட்சி தங்களுக்குக் கிடைத்த பெரும் ஆயுதமாகக் கொண்டு தொடர்ந்து பிரசாரம் செய்து வந்தது. இதுவே ட்ரம்ப் – ஹிலாரி பங்கேற்ற விவாதங்களிலும் எதிரொலித்தது.

### கருத்துக் கணிப்புகளை பொய்யாக்கி ட்ரம்ப் வெற்றி

* பெரும்பாலான அனைத்து கருத்துக் கணிப்புகளும் ட்ரம்ப் வெற்றி பெறுவது கடினம் என்று கூறிய நிலையில் அனைத்து கருத்துக் கணிப்பையும் பொய்யாக்கி அமெரிக்காவின் 45ஆவது அதிபராக ஜனவரியில் பதவி ஏற்க இருக்கிறார் டொனால்ட் ட்ரம்ப்.

(கேள்வி தொடரும்...)




"ஹேகலின் தத்துவார்த்த எழுத்துகளை ஆன்மிக வாதம் என்றும், புதிரான புராணக் கதை என்றும் கடுமையாக விமர்சித்த காள் மாக்ஸ், அவரது இயங்கியல் கோட்பாட்டை மெச்சத் தவறவில்லை. 'இயக்கத்தின் இரகசியத்தை முதன் முதலாக ஆழமாக விளக்கிய பெருமை ஹேகலைச் சாரும்' எனப் பாராட்டினார். எனினும், ஹேகலின் இயங்கியல், இறையியலில் புதைந்து கிடக்கிறது; பிரபஞ்சம் எங்கும் வியாபித்து நிற்கிறது; ஆகாயத்தில் தலைகீழாகத் தொங்கும் அதனை, பூமிக்குக் கொண்டு வந்து நிலத்தில் காலூன்றச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார் மாக்ஸ். ஹேகலின் இயங்கியல் எண்ண விதை, பூடகமான ஆன்மிக மேலுறையால் போர்த்தப்பட்டிருக்கிறது."

# உலக வரலாறும் மனித விடுதலையும்

யுகம் யுகமாக விடுதலை நோக்கிய முனைப்போடு முடிவில்லாப் பயணத்தில் முன்னேறிச் சென்ற மனித வரலாற்று இயக்கம் இறுதியில் அரசுகளின் உருவாக்கத்துடன் தனது யாத்திரையை முடித்துக்கொள்கிறது.

அரச நிறுவனத்துக்கு ஹேகல் எதற்காக முக்கியத்துவம் கொடுத்தார்? தனது முதுமைக்காலத் தத்துவ எழுத்துக்களில் அரசின் உன்னதம் பற்றி அவர் போதித்தமை ஏன்? உலக வரலாற்று இயக்கத்தை அன்றைய ஜேர்மானிய சர்வாதிகார அரசுக்கு அடிபணிய வைத்தமையின் காரணம் என்ன? பிரபஞ்சப் புரட்சியால் எழுந்த சுதந்திரத் தீ ஜேர்மானிய ஆளும் வர்க்கத்துக்குச் சவாலாக எழுந்தபொழுது ஹேகலின் தத்துவம் அன்றைய சர்வாதிகார அரசை நியாப்படுத்த முனைந்தது என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அன்றைய ஜேர்மானிய அரசும் மக்கள் சமூகமும் முரண்பட்டு நின்றபொழுது - தனிமனித சுதந்திரங்களை அரசு மிதிக்கும்பொழுது - மனிதரிடையே சமத்துவம் நிலவாதபொழுது- அரசின் மகத்துவம் பற்றி அவர் எழுதியமை ஜேர்மானிய இளம் புரட்சியாளர்களைச் சீற்றம்கொள்ளச் செய்தது. இந்த இளம் புரட்சியாளர்களில் முக்கிய சிந்தனையாளராக விளங்கியவர் காள் மாக்ஸ். நவீன அரசின் தோற்றப்பாட்டுடன் மனித வரலாற்று இயக்கம் நிறைவு காண்கிறது என்ற ஹேகலின் கருத்தை காள் மாக்ஸ் நிராகரித்தார். அன்றைய ஜேர்மானிய அரசு ஒரு முதலாளிய சர்வாதிகார அரசு. அந்த அரசில் ஓர் அடிப்படையான முரண்பாடு நிலவியது. அதாவது, முதலாளிய ஆளும் வர்க்கத்துக்கும் ஆளப்படும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் மத்தியில் முரண்பாடு நிலவியது. வர்க்க முரண்பாடுகள் நிலவும் வரை சமத்துவமும் சுதந்திரமும் தோன்றா. முரண்பாட்டினால் எழும் வர்க்கப் போராட்டமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஆகவே, வர்க்க முரண்பாடு நீங்கிய, சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் பொதுவுடைமை சமுதாயத்தில்தான் மனித வரலாறு பூரணத்துவம் பெறும் என்பது காள் மாக்ஸின் தத்துவம்.

ஹேகலின் தத்துவார்த்த சிந்தனை காள் மாக்ஸை வெகுவாகக் கவர்ந்தது என்பது உண்மை. எனினும், ஹேகலின் தத்துவத்தை அவர் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஹேகலின் வரலாற்றுத் தரிசனத்தில் எத்தகைய கருத்துக்களை அவர் நிராகரித்தார், எத்தகைய கருத்துக்களை உள்வாங்கித் தனது சமூக வரலாற்றுத் தத்துவத்தைப் படைத்தார் என்பதை இனி விரிவாகப் பார்ப்போம்.


ஹேகல்

ஹேகலின் தத்துவார்த்த எழுத்துகளை ஆன்மிகவாதம் என்றும், புதிரான புராணக் கதை என்றும் கடுமையாக விமர்சித்த காள் மாக்ஸ், அவரது இயங்கியல் கோட்பாட்டை மெச்சத் தவறவில்லை. 'இயக்கத்தின் இரகசியத்தை முதன் முதலாக ஆழமாக விளக்கிய பெருமை ஹேகலைச் சாரும்' எனப் பாராட்டினார். எனினும், ஹேகலின் இயங்கியல், இறையியலில் புதைந்து கிடக்கிறது; பிரபஞ்சம் எங்கும் வியாபித்து நிற்கிறது; ஆகாயத்தில் தலைகீழாகத் தொங்கும் அதனை, பூமிக்குக் கொண்டு வந்து நிலத்தில் காலூன்றச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டார் மாக்ஸ். ஹேகலின் இய்ங்கியல் எண்ண விதை, பூடகமான ஆன்மிக மேலுறையால் போர்த்தப்பட்டிருக்கிறது. இந்த மேலுறையைச் கழற்றி எறிந்து விட்டு விதையை மட்டும் எடுக்க வேண்டும் என்று இன்னோர் இடத்தில் கூறுகிறார்.

ஹேகலின் கருத்துலகிலிருந்து இயங்கியலைப் பிரித்தெடுக்கும் அறுவைச் சிகிச்சையை மாக்ஸியம் நுட்பமாகச் செய்திருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சை மூலம் பிரபஞ்ச யாத்திரையில் சென்ற இயங்கியல் பூமிக்குக் கொண்டு வரப்படுகிறது. சமூக எதார்த்த நிலத்தில் நிறுத்தப்படுகிறது.

ஹேகலின் ஆன்மிகத்தை மாக்ஸியம் விரட்டியது. ஆயினும்,ஹேகலின் 'ஆவியை' மாக்ஸியத்தால் விரட்ட முடியவில்லை. அது மறைபொருளாக, எதிர்மறையின் சாகாத பண்பாக மாக்ஸியத்தில் புரையோடிக் கிடக்கிறது. மாக்ஸியத்தின் பிதாமகர்களான மாக்ஸ், ஏங்கல்ஸ் தொடக்கம், மாக்ஸியப் புரட்சிவாதிகளான லெனின், மாவோ மற்றும் பல நவ-மாக்ஸிய தத்துவ அறிஞர்கள் வரை ஹேகலின் இயங்கியல் தத்துவம் பலரால் பல்வேறு ரகங்களில், பல்வேறு வடிவங்களில் உள்வாங்கப்பட்டிருக்கிறது.

மாக்ஸின் தோழரான ஏங்கல்ஸ் இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார். இயற்கையின் இயங்கியல் (Dialectice of nature) என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல் இயங்கியல் விதிகளை விஞ்ஞான விதிகளாக நிறுவமுனைகிறது. உயிருலகமும் பொருளுலகமும் இயங்கியலால் இயக்கப்படுகின்றன என அவர் தரும் பல உதாரணங்களை இன்றைய அறிவியல் ஏற்க மறுக்கிறது. அன்றைய காலகட்டத்தில், அவர் இயங்கியலின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தி எழுதினார் என்பதை இன்று பலர் ஒப்புக்கொள்கிறார்கள்.

இயங்கியலின் அடிப்படையில் ஆன்மத்தின் சூட்சுமத்தை விளக்க முனைந்தார் ஹேகல். அதே இயங்கியல் விதிகளைக் கொண்டு இயற்கையின் இரகசியங்களை விளக்க முனைந்தார் ஏங்கல்ஸ். அதே விதிகளைக் கொண்டு சமூக வரலாற்று இயக்கத்தை விளக்க முனைந்தார் மாக்ஸ்.

ஹேகலின் இயங்கியலுக்கும் மாக்ஸிய இயங்கியலுக்கும் மத்தியில் அடிப்படையான வேறுபாடு உண்டு என வாதிப்பவர்களும் உளர். ஹேகலின் இயங்கியல் கருத்து நிலை சார்ந்தது; அகவயமானது; அது நிஜவுலகத்தின் நிழலான மனவுலகத்தை ஆராய்கிறது. ஆனால், மாக்ஸின் இயங்கியல் பொருளியம் சார்ந்தது; அது நிஜவுலகத்தின் மெய்யுண்மைகளை விளக்க முனைகிறது என்பது இவர்களது வாதம். இவ்விதம் ஹேகலின் சிந்தனையிலிருந்து மாக்ஸிய இயங்கியலை வேறுபடுத்தி அதனைப் பொருளிய இயங்கியல் (materialistic dialectics) என இவர்கள் வர்ணிக்கிறார்கள். இந்த வேறுபாட்டில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயினும், இந்த வேறுபாடு ஆய்வுப் பொருள் சார்ந்தது;ஆய்வுமுறை சார்ந்தது. ஆனால், இயங்கியலின் மூல விதிகளில் அடிப்படையான மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இந்த மூல


காள் மாக்ஸ்

விதிகளை நெறித்தவர் ஹேகல். இது அபாரமான கண்டுபிடிப்பு என மாக்ஸியத்தின் தந்தைகளே மெச்சியிருக்கிறார்கள். இந்த மூல விதிகளை மாக்ஸியம் உள்வாங்கி, அதன் அடிப்படையில் ஆழமான சமூக ஆய்வுகளையும், நடைமுறைப் பரிசோதனைகளையும் செய்திருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப் போனால், ஹேகலின் இயங்கியல் விதிகளை மாக்ஸியம் உள்வாங்கி, அவற்றைச் சீரமைத்து, செழுமைப்படுத்தி சிறப்பான ஆய்வுக் கருவியாகக் கையாண்டிருக்கிறது எனலாம். இயக்கத்தின் இரகசியத்தைக் கண்டுபிடித்த ஹேகல், அதனைப் படைத்தலின் சூட்சுமமாகக் கொண்டார். பிரபஞ்சப் பேரான்மாவின் சிருஷ்டிப்பு வித்தையாகக் கண்டார். இதனால் அவரது இயங்கியல் தத்துவம் ஆன்மிக உலகத்தின் சிகரத்திலிருந்தே மனித வாழ்க்கையை நோக்குகிறது. இந்த நோக்கில், மனித வாழ்வும் மனித வ்ரலாறும் தெய்வீகத் திருக்கூத்தாக அவருக்குத் தென்பட்டன. இயங்கியலின் மூல விதிகளை நெறித்து அந்தப் பிரமாதமான கண்டுபிடிப்பை ஆன்மிகக் கருத்துலகில் புதைத்து விடுகிறார் ஹேகல்.

(தொடரும்...)

## தேச விடுதலையுடன் மானிடத்தின் விடுதலை குறித்தும் ஆழமாகச் சிந்தித்த தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம்

*ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றிய சிந்தனைப் புரட்சியை முன்வைத்தவர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம்.*

*அவர் வெறும் அரசியல் மதியுரைஞர் மட்டுமல்லர். அதையும் தாண்டி ஒரு தத்துவாசிரியர். ஓரினத்தின் தேச விடுதலையையும் தாண்டி மனித விடுதலை பற்றியும் ஆழமான ஆத்ம விசாரணைகளைச் செய்த ஓர் ஆய்வறிஞர்.*



*'விடுதலை' என்ற தமது நூலிலே அரசியலுக்கு அப்பால், மேலும் பல்துறை சார்ந்த தமது சிந்தனைத் தெறிப்புக்களை அவர் முன்வைத்துள்ளார்.*

*அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற அறிவியல் பரப்புகளை ஊடுருவி நிற்கும் அர்த்தம் பொதிந்த கட்டுரைகள் அதில் அடங்கியுள்ளன.*

*இந்த விசாரணைகள் அனைத்துக்கும் மூலப் பொருளாக விளங்குபவன் மனிதன். ஆகவே, மனிதன் பற்றியும், மனித வாழ்வு மற்றும் வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின் புதுமையான, புரட்சிகரமான பார்வைகளை இக்கட்டுரைகள் வாயிலாக அறிமுகம் செய்துவைக்கிறார் 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம்.*

# திகிலூட்டும் பேய் மாளிகை கிரிந்திவெல காட்டுப் பகுதியில்!



கொழும்பு, நவ.18

திகிலூட்டும் வகையிலான பேய் மாளிகை ஒன்று கம்பஹா கிரிந்திவெல திக்கந்த வலவ்வ என்ற பிரதேசத்தில் இனங் காணப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் தகவல் வெளியிட் டுள்ளன. மிகவும் பிரமாண்ட மான முறையில் 100 அறைக ளைக் கொண்டதாக இந்த பேய் மாளிகை அமைந்துள்ளது.

ஆள்களற்ற மலைப்பகுதி யில் நூற்றுக்கும் மேற்பட்ட தோட் டக் காணிக்குள் இந்த பேய் மாளிகை அமைந்துள்ளது.

அந்தக் காணிக்குரிய சொந் தக்காரர் வெளிநாட்டில் வசிப்ப தால், யாரும் கவனிப்பாரற்ற நிலையில் அந்த மாளிகை காணப்படுகிறது.

அது தற்போது பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதனைப் பார்வையிட யாருக் கும் அனுமதி வழங்கப்பட வில்லை என்று குறிப்பிடப்படு கின்றது. இலங்கையில் பேய் களுக்கு மிகவும் பிரபலமான இட மாகதிக் கந்தவலவ்வ பகுதியை சிலர் கூறிவருகின்றனர்.

இதுதொடர்பான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் வெளி வந்து கொண்டிருக்கின்றன. (ஏ)

## தினசரி ராசி பலன் 18.11.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 9.15 - 10.15 |
| | மாலை : 4.45 - 5.45 |
| ராகு காலம் | : 10.30 - 12.00 |
| குளிகன் | : 7.30 - 9.00 |
| எமகண்டம் | : 3.00 - 4.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

சுபமுகூர்த்த நாள் - மேல்நோக்கு நாள்

**மேஷம்** : கவனம் - எடுக்கும் காரியங்களில் சிறப்புக்கள் குறையும், ஆதலால் கவனத்துடன் இருக்க வேண்டிய நாள்.

**ரிஷபம்** : பொறுமை - நிதானத்தைக் கடைப்பிடித்து நிம்மதியை நாடுவீர்கள்.

**மிதுனம்** : வாழ்வு - வழமையான எண்ணங்கள் சிறந்த வண்ணங்கள் கொண்டு நிறைவேறும் நன்னாள்.

**கடகம்** : நிறைவு - இன்று எண்ணங்கள் யாவற்றிலும் சிறப்புக் காணுவீர்கள்.

**சிம்மம்** : ஆதாயம் - எதிர்பாராத வகையில் வரவுகள் கிடைக்கும்.

**கன்னி** : பரிசு - உழைப்புக்குத் தகுந்த ஊதியத்துடன் கூடிய பரிசுகளும் கிடைக்கும்.

**துலாம்**: நன்மை - நீண்ட நாளைய ஆசைகள் நிறை வேறி நன்மைகள் பலவும் கிடைக்கும்.

**விருச்சிகம்**: சலனம் - பிற்பகுதியில் இருந்து சந்திராஷ்டமம் என்பதால் தேவையில்லாத மனக்குழப்பங்கள் வந்து சேரும்.
சந்திராஷ்டமம்: கேட்டை

**தனுசு**: அசதி - பிற்பகுதியில் இருந்து சந்திராஷ்டமம் என்பதால் வீண்அலைச்சலால் அசதி உண்டாகும்.
சந்திராஷ்டமம்: மூலம்

**மகரம்**: இன்பம் - மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

**கும்பம்**: ஆர்வம் - செய்யும் செயல்களில் கூடுதல் ஈடுபாட்டுடன் வாழ்வில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்**: சோர்வு - உழைப்பினால் மனதாலும், உடலாலும் சோர்வு ஏற்படும்.

# மாணவர் பாடசாலை செல்வது குறைவு; பெற்றோரின் கூடிய கவனம் தேவை

## சிறுவர் தின நிகழ்வில் யாழ். அரச அதிபர்



பருத்தித்துறை, நவ.18

"பாடசாலைகளில் மாணவர் களின் வரவு குறைவடைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்விடயத்தில் பெற் றோர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்".

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சர்வ தேச சிறுவர், முதியோர், மாற்று வலுவுடையோர் தின விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். வட மராட்சி கிழக்கு பிரதேசசெயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றும் போது. "முதி யோர்கள் எமது வாழ்வுக்கு வழி காட்டியவர்கள். அவர்கள் எமது சமூகத்தில் பேணிப் பாதுகாக்கப் பட வேண்டும். மாற்றுவலுவுள் ளோரையும் எமது சமூகத்தின் அங்கத்தவர்களாக மதித்து அவர் களின் வாழ்வு சிறக்க உதவ வேண்டும்.

பாடசாலைகளில் மாணவர் களின் வரவு குறைவடைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்விடயத்தில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும். பாடசாலைகளில் பிள்ளைகள் கல்வியுடன் சேர்த்து நல்ல பண் பையும் வளர்த்துக் கொள்வ தற்கு வாய்ப்பு இருக்கின்றது".- என்றார்.

பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி யீட்டியவர்களுக்கு யாழ்.அரச அதிபர் பரிசில்களை வழங் கினார். (இ-3)

# பங்களாதேஷில் இளைஞர் மாநாடு இலங்கை இளைஞர்களும் பங்கேற்பு

கொழும்பு, நவ.18

பங்களாதேஷில் நடை பெறும் 4ஆவது இளைஞர் பரி மாற்றுத்திட்ட நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கையி லிருந்து இளைஞர் மற்றும் யுவ திகள் 15 பேர் அங்கு சென்றுள்ள னர்.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்த இந்த மாநாடு எதிர்வரும் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவை கள் மன்றம் மற்றும் அந்த மன் றத்தின் சர்வதேச இளைஞர் தொடர்புப் பிரிவு ஆகியவை இணைந்து, இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன.

இந்த மாநாட்டில் இளைஞர் பரிமாற்றுத்திட்ட வெளிக்கள மற்றும் உட்கள நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் இளைஞர் மற்றும் யுவதிகள் பங்குபற்று கின்றனர்.

இதற்கமைய, ஏறாவூரிலி ருந்து தேசிய இளைஞர் சேவை கள் மன்ற பிரதேச இளைஞர் சம்மேளன உறுப்பினர்களில் ஒருவரான யூசுப் நவாஸ், இந் நிகழ்வுகளில் பங்கு பெறுவதற்கா கச் சென்றுள்ளார்.

பங்களாதேஷ் மற்றும் இலங் கைக்கு இடையிலான இந்த இளைஞர் பரிமாற்று வேலைத் திட்டம் இளைஞர்கள் மத்தியில் ஒருங்கிணைந்த நடைமுறைச் சாத்தியமான பயிற்சிகளையும், சிந்தனை மற்றும் கலாசாரப் பரி மாற்றத்தையும் வளர்த்துக் கொள் வதற்கான வாய்ப்பை வழங்கும் என்று ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஏ)

# அகில இலங்கை சமாதான நீதவானாக பதவிப்பிரமாணம்



யாழ்ப்பாணம், நவ.18

யாழ்ப்பாணம், சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த வைத்திய லிங்கம் பாலகிருஷ்ணன் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதி அமைச்சால் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் அண்மையில் யாழ்ப் பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னி லையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் முன்னர் அம்பாறை மாவட்ட தமிழ் மன்றம், இந்து இளைஞர் பேரவை ஆகியவற் றின் தலைவராகவும் திருகோண மலை மாவட்ட திவ்விய ஜீவன சங்கம் சைவ அபிவிருத்திச் சங் கத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

ஓய்வு நிலை கமத்தொழில் சேவைப் பெரும்பாக உத்தி யோகத்தரான இவர் தற்போது பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநர்சபைப் பணிப்பாளராக பதவி வகித்து வருகிறார். (இ

# இலங்கையர் இருவர் கொல்கத்தாவில் கைது

கொல்கத்தா, நவ.18

இலங்கையர்கள் இருவர் கொல்கத்தாவில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சென்னைக்கு போதைப் பொருள்களைக் கடத்த முற் பட்ட வேளையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று 'டைம்ஸ் ஒப் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

அவர்களிடம் இருந்து 23 இலட்சம் இந்திய ரூபா பெறுமதி யான 230 கிராம் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இருவரும் வெவ்வேறு விமானங்களில் சென்னை நோக்கிப் பயணிக்க முற்பட்ட வேளையில், மத்திய கைத்தொழில் பாதுகாப்புப் படை யினரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஏ)

# கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிரான கையெழுத்து இயக்கம் ஆரம்பிப்பதற்கான கூட்டம் நாளை

மாத்தளை, நவ.18

கூட்டு ஒப்பந்தத்துக்கு எதி ரான கையெழுத்து இயக் கத்தை ஆரம்பிப்பதற்கான கூட் டம், மாத்தளை, அருணா லோக்க உணவக மண்டபக் கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற வுள்ளது.

சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு, பல்வேறு தொழிற் சங்க, அரசியல், சிவில் அமைப்புகளை இணைத்து இதற்கான ஏற்பாடுகளை முன் னெடுத்துள்ளது.

இதுதொடர்பில், அந்த அமைப்பு விடுத்த வேண்டு கோளில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு;

இம்முறை கைச்சாத்திடப் பட்ட கூட்டு ஒப்பந்தம் தோட்டத் தொழிலாளர்களைப் பட்டப் பக லில் ஏமாற்றி நட்டாற்றில் விட் டுள்ளது. இதனால் தாம் வெறு மனே அதனை வேடிக்கை பார்க் கப் போவதில்லை.

18 மாத கால நிலுவைப் பணம் கிடைக்கவேண்டும், காலவரை யற்ற ஒப்பந்தமாகக் காணப்படு கின்றமை, உற்பத்தி ஊக்குவிப் புத்தொகை என தெளிவற்ற விட யங்கள் சேர்க்கப்பட்டுள்ளமை, தோட்ட நிர்வாகம் நியமிக்கும் வரையறை கட்டாயமாக நிறை வேற்றப்பட்டமை.


மற்றும் தெளிவற்ற குத்தகை முறை போன்ற இவ்விடயங் களை முன்னிறுத்தி இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

எனவே, தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளைக் கலந்து கொள் ளுமாறு பகிரங்க அழைப்பு விடுத் துள்ளது.

மேலும், மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் இவ் வேலைத் திட்டத்தில் பங்கு பற்றித் தங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்யுமாறும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (ஏ)

# போருக்கு அஞ்சி வெளியேறியோரை நாட்டுக்கு அழைக்க புதிய வியூகம்

## பிரதமர் ரணில் நம்பிக்கை தெரிவிப்பு



கொழும்பு,நவ.18

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை தரமுயர்த்துவதன் மூலம் அங்கிருந்து மேற்கு நாடுகளுக்குச் சென்றவர்களை மீண்டும் வரவழைக்க முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

போரால் சீர்குலைக்கப்பட்ட பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் இம்முறை கடந்த வருடத்திலும் பார்க்க இரண்டு மடங்கு நிதி யாழ்ப்பாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பணிக்கு வலுசேர்க்கும் வகையில் மேற்குலகில் வசிக்கும் தமிழ் கோடீஸ்வரர்கள் யாழ்ப்பாணத்துக்கு நிதியுதவி செய்ய வேண்டும் எனவும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் மேலும் கூறியிருப்பதாவது:-

உள்நாட்டுப் போரைக் காரணமாக வைத்துத் தமிழர்களும் சிறந்த வாழ்க்கை முறையை எதிர் பார்த்து அனைத்து இனங்களைச் சேர்ந்தவர்களும் நாட்டை விட்டுதப்பிச் சென்றிருந்தனர்.

நாட்டின் பொருளாதாரம் பலப்படுத்தப்படுமாயின் இவர்கள் மீண்டும் நாட்டுக்கு திரும்பி வருவதில் எவ்வித ஐயமும் இல்லை. போருக்கு அஞ்சி நாட்டை விட்டுச் சென்றவர்களை மீண்டும் அழைக்கும் அடிப்படையில் அரசாங்கம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2009 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட பிரேரணையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் வெளி விவகார அமைச்சர் மற்றும் அதிகாரிகளால் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் அதே நேரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார். (ஐ)

## 9 இலங்கைத் தமிழரை நாடு கடத்தியது சுவிஸ்!

கொழும்பு,நவ.18

சுவிஸில் இருந்து 9 இலங்கை தமிழர்கள் நேற்று முன்தினம் நாடுகடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், நாடு கடத்தப்பட்டவர்களின் பெயர் விவரங்களையும் அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது.

இதன்படி, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிவகுமார் சிந்துஜன், யாழ்ப்பாணத்தை சேர்ந்த தம்பிராஜா நிரோசன், புங்குடுதீவு ரஜீவன், இணுவில் லிந்துதாஸ் , யாழ்ப்பாணம் பாலசுதன், பருத்தித்துறை காண்டீபன் , பருத்தித் துறை சிவநேசன் ஆகியோர் இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டு அரசு குறிப்பிட்டுள்ளது.

குறித்த ஒன்பது பேரும் சுவிஸ் நாட்டின் சட்டதிட்டங்களை மீறிக் குடியேறியவர்கள் என அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், நாடுகடத்தப்பட்ட அனைவரும் விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த அனைவரையும் விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## சுதந்திரக் கட்சியைப் பிரிக்க பிரதமர் ரணில் முயற்சிக்கிறார்

### புதிய கட்சிக்கு தலைமையேற்று பீரிஸ் கன்னி உரை



கொழும்பு,நவ.18

ஶ்ரீலங்கா மக்கள் முன்னணி (பொதுஜன பெரமுன)யின் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் தனது கன்னி உரையை நேற்று நிகழ்த்தினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பின் போதே ஜீ.எல்.பீரிஸ் தமது முதல் உரையை நிகழ்த்தினார்.

இந்த உரையில் பீரிஸ் தெரிவித்ததாவது:-

நீதிக் குற்ற விசாரணைப் பிரிவு மூலம் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிளவடையச் செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க முயற்சித்து வருகின்றார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் கொண்டாட்டம் நாளை (இன்று) இடம்பெறவுள்ளது.

எனவே நாளை (இன்று) கட்சி தொடர்பில் புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் கட்சியை சிறப்பாக கொண்டு செல்வதற்கு முயற்சி செய்துள்ளோம்.- என்று ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். (ஐ)

## இலங்கை— பெலரூஸ் இடையே ஒற்றுமை நோக்கில் ஒப்பந்தம்

### ஜனாதிபதியின் யோசனைக்கு அங்கீகாரம்

கொழும்பு,நவ.18

இலங்கை மற்றும் பெலரூஸ் ஆகிய நாடுகளுக்கிடையில் குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

குற்றங்களைத் தடுத்தல் மற் றும் கட்டுப்படுத்துவதில் இரு நாடுகளுக்கு இடையில் பய னுள்ள ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் சந்தேக நபர்களை குறித்த நாட்டுக்கு அனுப்புதல் தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தப் போன்ற நோக்கில் இந்த ஒப்பந்தம் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரூ.7 கோடி பெறுமதியான குண்டு துளைக்காத ஜீப்!

### கருணாவின் மனைவியிடம் விசாரணை

கொழும்பு,நவ.18

கருணா எனப்படும் விநாயமூர்த்தி முரளிதரன் பயன்படுத்தினார் என்று கூறப்படும் குண்டு துளைக்காத ஜீப் ஒன்று அண்மையில் மட்டக்களப்பு பிரதேச வாகன திருத்துமிடத்தில் இருந்து மீட்கப்பட்டிருந்தது.

7 கோடி ரூபா பெறுமதியான இந்தக் குண்டு துளைக்காத வாகனம் தொடர்பில் வாக்கு மூலம் ஒன்று பெற்றுக் கொள்வதற்காக கருணாவின் மனைவி நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த ஜீப் கருணாவின் சாரதி ஒருவரால் குறித்த வாகன திருத்துமிடத்துக்கு கொண்டு வந்து விட்டு செல்லப்பட்டுள்ளது. இது குறித்து பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு தகவல் கிடைத்துள்ளது என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த ஜீப்பை சுங்க பிரிவில் இருந்து விடுவித்துக் கொள்வதற்காக முன் வந்துள்ள அப்போதைய பொறுப்பு கூற வேண்டிய அதிகாரி தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த அரசின் காலத்தில் இந்த ஜீப் சட்ட விரோதச் செயற்பாடுகளுக்குபயன்படுத்தப்பட்டதா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள் ளப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்ட குறித்த குண்டு துளைக்காத ஜீப் பதிவு செய்யாமல் சீ.சீ இலக்கத் தகடுடன் பயணித்துள்ளமையும் அறியப்பட்டுள்ளது என்று மேலும் கூறினார் அந்த உயர் அதிகாரி. (ஐ)

## பதவிப்பிரமாண இரு வருடப் பூர்த்தி: அமைதியாக கொண்டாட அறிவுறுத்து

பதவிப் பிரமாணத்தின் இரண்டாம் வருடப் பூர்த்தி நிகழ்வு உற்சவங்கள், களியாட்டங்கள் இன்றிக் கொண்டாடுமாறு, ஜனாதிபதி மைத்தரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போதே, அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கயந்த கருணா திலக்க, மேற்படி அமைச்சரவை முடிவைக் கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இரண்டாம் வருடபூர்த்தி, 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி கொண்டாடப்படும்.

அதை தேவையற்ற உற்சவங்கள், களியாட்டங்கள் இன்றிக் கொண்டாடவும். 2017ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டயோசனைகளை செயற்படுத்த வேண்டியவற்றை துரித கதியில் ஆரம்பிக்கவும். அத்துடன், பொது மக்களுக்கு மிகவும் பயனுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று அரச நிறுவனங்களுக்கு, ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## புதிய வகையில் மின் உற்பத்திக்கு அரசு திட்டம்

டீசல் மற்றும் அனல் போன்ற பெற்றோலிய வகைகளைப் பயன்படுத்தும் மின்னுற்பத்தி நிலையங்களுக்குப் பதிலாக காற்று, நீர் மின்னுற்பத்தி மற்றும் சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தகு வலுச்சக்தி வளங்களை பயன்படுத்தி மின்னுற்பத்தியில் ஈடு பட வேண்டிய தேவையை அரசு உணர்ந்துள்ளது.

அதனடிப்படையில், இலங்கை மகாவலி அதிகார சபைக்கு உரித்தான மகாவலி பொருளாதார வலயத்தில் அமைந்துள்ள கமத் தொழிலுக்கு பயன்பாடற்ற இடம், நீர்த்தேக்கம் மற்றும் கால்வாய்களை இனங்கண்டு அவற்றில் மிதக்கும் சூரிய சக்தி உற்பத்தி பிரிவொன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சூழலுடன் ஒத்துச் செல்லும் புதுப்பிக்கத்தகு வளங்களின் மூலம் இயங்குகின்ற மின்னுற்பத்தி நிலையங்களை நிர்மாணிப் பதற்காக கொள்கை அடிப்படையில் அங்கீகாரம் வழங்குவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

## குருநாகல் சம்பவத்தை விசாரிக்கப் பொலிஸ் குழு

கொழும்பு,நவ.18

குருநாகல் பகுதியில் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் நேற்று முன்தினம் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், விசாரணைகள் மேற்கொள்வதற்குப் புதிய பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று குருநாகல் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்தச் சம்பவத்தில் சப் இன்ஸ்பெக்டர் உயிரிழந்ததுடன், இரண்டு பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சதீஸ்கரில் நக்சல்கள் 6 பேர் சுட்டுக்கொலை!



ராய்ப்பூர், நவ.18

சதீஸ்கர் மாநிலத்தில் பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் இரவு நடத்திய தாக்குதலில் 3 பெண்கள் உட்பட 6 நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டனர்.

தந்தேவாடா மாவட்டத்தில் உள்ள நக்ஸலைட்டுகள் நடமாட்டம் உள்ள வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது பாதுகாப்புப் படையினருக்கும் நக்ஸலைட்டுகளுக்கும் இடையே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

இதில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பெண்கள் உட்பட 6 நக்ஸலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

அரன்பூர் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட கொண்டபள்ளி கிராமத்தின் வனப்பகுதியிலேயே இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# மீனவர்களுடனான பேச்சு நாடகம் என்பது நிரூபணம்

*தமிழ்நாடு காங்.குழுத்தலைவர் திருநாவுக்கரசர் சாடல்*



சென்னை, நவ.18

மீனவர்களுடன் மத்திய அரசு நடத்திய பேச்சு நாடகமான செயலே என்பது இந்திய மீனவர் மீது இலங்கைக் கடற்படை மீண்டும் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிரூபித்துள்ளது என்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுத்தலைவர் திருநாவுக்கரசர் சாடியுள்ளார்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

"இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் கூட்டுப் பணிக் குழுவை ஏற்படுத்துவது என்று கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற இரு நாட்டு வெளியுறவுத்துறை, விவசாயத் துறை அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இரு நாடுகளின் கடலோரக் காவல்படையினர் மற்றும் கப்பல் படையினர் மீனவர்களிடம் வன்முறையுடன் நடந்து கொள்ளக்கூடாது. அவர்களால் மீனவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடாது என்று மீனவர் சங்கங்கள் முன் வைத்த கோரிக்கைகளை இந்தக் கூட்டத்தில் இரு நாடுகளும் ஏற்றுக்கொண்டன.

இந்தநிலையில், கோடியக் கரை அருகே நேற்று முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மற்றும் காரைக்கால் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 2 மீனவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மீனவர்களுடன் மத்திய அரசு பேச்சு நடத்தியது நாடகம் என்பதைத் தெளிவாக நிரூபித்துள்ளது.

மேலும் ரூ.500, ரூ.1000 தாள்களுக்கு மத்திய அரசு தடை விதித்தது கண்டிக்கத்தக்கது" என்று கூறினார். (ஏ)

# ரூபா தாள்கள் மீளப்பெற்றதால் பொருளாதாரம் வலுப்பெறும்

## டில்லியில் மோடியைப் பாராட்டிய பில்கேட்ஸ்



டில்லி, நவ.18

ரூபா தாள்கள் மீளப் பெறப்பட்டதன் மூலம் நிழல் பொருளாதாரம் ஒழிக்கப்பட்டு, வெளிப்படையான பொருளாதாரம் வலுப்பெறும் என்று மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறுவுநர் பில்கேட்ஸ் கூறியுள்ளார்.

டில்லிக்குப் பயணம் மேற்கொண்ட பில்கேட்ஸ் பிரதமர் மோடியைச் சந்தித்தார். அதனைத் தொடர்ந்து பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் பேசியவை வருமாறு;

"அடுத்து வரும் சில வருடங்களில், இந்தியா டிஜிட்டல் மயமான பொருளாதாரமாக மாறும்.

அதேசமயம் இந்திய அரசு உள் கட்டமைப்பு, கட்டடங்கள், திறமையான சந்தைகளை உருவாக்குவதுடன், நிலம் மற்றும் தொழிலாளர் பிரச்சினைகள், வரி விகிதங்கள் ஆகியவற்றில் உள்ள பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும்.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு அரசியல் சாசன திருத்தப்பிரேரணை (ஜி.எஸ்.டி), கொண்டு வந்தது சிறந்த நடவடிக்கைதான். ஆனால், இது ஆரம்பம்மட்டுமே. சர்வதேச பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று மட்டும் இந்தியாவை உலக நாடுகள் பார்க்கவில்லை. சர்வதேச சவால்களைப் புதிய கண்டு பிடிப்புகள் மூலம் தீர்க்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றன.

இதற்குமுன்னர் மேற்கொள்ளாத பல திட்டங்களை முன்னெடுக்க இந்தியா முயற்சி செய்கிறது. தற்போது, பெரிய பிரச்சினைகளைத் தீர்க்கும் அளவுக்கு திறமைபெற்ற அரசை இந்தியா பெற்றுள்ளது" என்றார். (ஏ)

# ஜல்லிக்கட்டுக்கான தடை; நீடித்தது உச்ச நீதிமன்றம்



டில்லி, நவ.18

ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கோரும் தமிழக அரசின் மீளாய்வு மனுவை நேற்று முன்தினம் தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம், அதற்கு விதித்த தடை உத்தரவு தொடரும் என்று அதிரடியாகத் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் ஜல்லிக்கட்டை அனுமதித்து இந்திய மத்திய அரசால் விடுக்கப்பட்ட அறிக்கைக்கு எதிராக விலங்குகள் நல அமைப்புகள் வழக்கு தொடர்ந்ததை அடுத்து ஜல்லிக்கட்டு நடத்த உச்சநீதிமன்றம் தடைவிதித்திருந்தது.

இந்தத்தடைக்கு எதிராக தமிழக அரசு மீளாய்வு மனுவைத் தாக்கல் செய்தது. அந்த மனு மீதான வழக்கின் இறுதி விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது குதிரைப் பந்தயங்களுக்கும் பட்டாசுகளுக்கும் தடை விதிக்கப்படாமல் ஜல்லிக்கட்டுக்கு மட்டும் தடைவிதிக்கப்படுவது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

எனினும் ஜல்லிக்கட்டை பொழுதுபோக்கான அல்லது மதரீதியான நிகழ்ச்சியாகப் பார்க்க முடியாது என்று தெரிவித்த உச்ச நீதிமன்றம் ஜல்லிக்கட்டு என்பதே கொடூரமானது. இதனால் தமிழக அரசின் மீளாய்வு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தெரிவித்துள்ளது. (ஏ)

# விடுதலைச் சிறுத்தைகள் சென்னையில் ஆர்ப்பாட்டம்

**ரூபா தாள்கள் அறிவிப்பைக் கண்டித்து இன்று**

சென்னை, நவ.18

பழைய 500, 1000 ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்ற அறிவிப்பை மீளப் பெறக்கோரி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சென்னையில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

இதுதொடர்பில் அந்தக் கட்சியின் தலைவர் திருமா வளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு;

'500, 1000 ரூபா தாள்கள் செல்லுபடியாகா என்று மத்திய அரசு அறிவித்ததை அடுத்து ஏழை, எளிய மக்கள் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர். மோடி அரசின் சர்வாதிகார அறிவிப்பால் இதுவரை 25 பேர் உயிரிழந்துள்ளனர். தனது சொந்தப் பணத்தை எடுக்க முடியாமல் அல்லல்படுகின்றனர். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தன் உயிருக்கு ஆபத்து என்று மோடி நாடகமாடுகிறார்.

தனது சொந்தப் பணத்தை எடுப்பதற்காக வங்கிகளுக்குச் செல்பவர்களுக்கு கைவிரலில் மை வைக்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இதை வன்மையாகக் கண்டிக்கிறோம். மக்களுக்கு எதிரான இந்த அறிவிப்பை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். மக்களை இன்னலுக்கு ஆளாக்கிய ரிசர்வ் வங்கி ஆளுநர் இதற்குப் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும்.

எனவே இவ்வாறான கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று முற்பகல் 10 மணிக்கு சென்னை மாவட்டச் செயலர் அலுவலகத்துக்கு அருகில் எனது தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் திரளாகப் பங்கேற்க வேண்டும்.'- இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஏ)

# டில்லியில் நேற்று நிலநடுக்கம்

டில்லி, நவ.18

டில்லியில் நேற்று அதிகாலை 4.30 மணி அளவில் 4.2 ரிச்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டது. டில்லி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில்நிலநடுக்கம்உணரப்பட்டது.

இதனை அடுத்து நில நடுக்கத்தை உணர்ந்த மக்கள் உடனடியாக வீடுகளை விட்டு வெளியேறினர். இதன்போது வீடுகள் குலுங்கின என்று சம்பவ இடத்தில் இருந்த மக்கள் தெரிவித்துள் ளனர்.

அரியானா மாநிலம் பவல் நகரிலிருந்து தென்பகுதியில் 13 கிலோமீற்றர் தொலைவில் நில நடுக்கம் மையம் கொண்டு பூமிக்கடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் உருவாகியுள்ளது.

இதனால், தலைநகரில் வசிக்கும் மக்கள் மத்தியில் அச்சம் நிலவியது. தொடர்ந்து சில நடுக்கம் ஏற்படலாம் என்று பதற்றத்துடனேயே அவர்கள் அங்கு தங்கியுள்ளனர். (ஏ)

# போலித் தாள்களை இந்தியாவுக்கு புழக்கத்தில் விட ஐ.எஸ்.ஐ. திட்டம்

போலி ரூபா தாள்களை நேபாளம் வழியாக இந்தியாவுக்குள் புழக்கத்தில் விட பாகிஸ் தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. திட்டமிட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு உளவு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கறுப்புப் பணம் மற்றும் போலி ரூபா தாள்களை ஒழிக்கவும் பயங்கரவாதச் செயல்களுக்கு அளிக்கப்படும் நிதிகளைத் தடுக்கும் விதமாகவும், கடந்த 8 ஆம் திகதி மாலை நாடு முழுவதிலும் உள்ள 500 மற்றும் 1000 ரூபா தாள்களை திரும்பப் பெறுவதாக பிரதமர் மோடி அதிரடியாக அறிவித்தார்.

இதையடுத்து மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். தற்போது புதிய 500 மற்றும் 2000 ரூபா தாள்கள் மக்கள் மத்தியில் புழக்கத்துக்கு வந்துள்ளன. புதிய தாள்களை யாரும் போலியான முறையில் அச்சடித்து விடக்கூடாது என்பதற்காக புதிய தாள்களில் பல்வேறு பாதுகாப்பு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையில், போலி ரூபா தாள்களை நேபாளம் வழியாக இந்தியாவுக்குள் புழக் கத்தில் விட பாகிஸ்தானின் உளவு அமைப்பானஐ.எஸ்.ஐ. திட்டமிட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு உளவு நிறுவனம் எச்சரிக்கை விடுத்தது.

இதையடுத்து பாதுகாப்பு அதிகாரிகள் நேபாள எல்லைப் பகுதியில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஏ)

## இஸ்ரேலுக்கு துருக்கியின் புதிய தூதுவர்

அங்காரா, நவ.18

இஸ்ரேலுக்கான புதிய தூதுவராக கெமல் ஓகெம் என்பவரை துருக்கி ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இதுதொடர்பில் பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவிருந்த அதிகாரபூர்வ பயணத்துக்கு முன் தலைநகர் அங்காராவில் நடைபெற்ற செய்தியாளர்கள் மா நாட்டில் பேசிய துருக்கிய ஜனாதிபதி எர்டோகன், "எமது பிரதமரின் வெளிவிவகாரத் துறையின் ஆலோசகர் கெமல் ஓகெம் என்பவரை இஸ்ரேலுக்கான தூதுவராக நாங்கள் நியமித்துள்ளோம்" என்று கூறினார்.

இதேவேளை இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பு அதிகாரி நேற்று முன்தினம் தெரிவித்ததாவது;

"லண்டன்துணைத்தூதுவராக உள்ள எய்டன் நயேஹ் அங்காராவின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். எனினும், அவர் எப்பொழுது பதவியை ஏற்றுக் கொள்வார் என்று உடனடியாக அறிவிக்கப்படவில்லை என்றார். (ஏ)

# அலெப்போவில் வான் தாக்கு! இதுவரை 54 பேர் உயிரிழப்பு

## சிறுவர் மருத்துவமனை மீது நேற்றுக் குண்டுவீச்சு

பெய்ரூட், நவ.18

சிரியாவின் கிழக்கு அலெப்போ நகர் மற்றும் வட பகுதிகள் மீது பரவலாக விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் அலெப்போ பிராந்தியத்தில் உள்ள சிறுவர் வைத்திய சாலை ஒன்றின் மீது நேற்று நடத்தப்பட்ட வான் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் குறைந்தது 54 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சிரிய எதிர்க்கட்சி போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அந்தப் பகுதிகளில் அரச படையினர் இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி பார் ஆசாத் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. அரசை எதிர்த்து கிளர்ச்சியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசு மற்றும் கிளர்ச்சியாளர்கள் இடையேயான போரில் இதுவரை லட்சக் கணக்கான மக்கள் கொல்லப் பட்டுள்ளனர்.

சிரியாவில் ஐ.எஸ். அமைப்பு மற்றும் சிரியா அல்-கொய்தா கூட்டமைப்பும் அரசுக்கு எதிராகத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. அவர்களை அடக்குவதற்காக அரசு ராணுவத்தைப் பயன் படுத்தி வருகிறது. சிரிய அரசின் இந்த நடவடிக்கைக்கு ரஷ்யா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவு அளித்து வருகின்றன.



அதன்படி, சிரியப்படைகளுடன் இணைந்து கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள பகுதிகள் மீது குண்டு வீசித் தாக்குதல்களை நடத்தியும் வருகின்றன. இந்த நிலையில், கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதிகள் என்று ரஷ்யா அறிவித்துள்ள சிரியாவின் வடக்குப்பகுதி மீது வான் வழி மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. நேற்று 2 ஆவது நாளாகவும் தாக்குதல் தொடர்ந்துள்ளது. இந்தநிலையில், இந்த தாக்கு தல்களில் குறைந்தது 54 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஏ)

## குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து வெளியேறுகின்றது ரஷ்யா!



மொஸ்கோ, நவ.18

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து ரஷ்யா வெளியேறுவதற்கு அந்தநாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார்.


இனப்படுகொலை, மனிதருக்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்களில் ஈடுபட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், 2002 இல் உருவாக்கப்பட்டது.

இந்த நீதிமன்றம் நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ளது.

2008 ஜூலை மாதம் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி உலகில் 106 நாடுகள் இந்த நீதிமன்றத்தின் உறுப்பினராக இருக்கின்றன, ஆனால் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற சில நாடுகள் இந்த அமைப்பைக் கண்டனம் செய்து அதில் இணைய வில்லை.

இந்தநிலையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து ரஷ்யா வெளியேறுவதற்கு அந்தநாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

குற்றவியல் நீதிமன்றம் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறி விட்டது என்று புடின் குற்றஞ் சாட்டியுள்ளார். இந்த நிலையில் பெரிய நாடான ரஷ்யா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறுவது பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஏ)



ஜப்பானின் புகுவோகோ நகர வீதியின் நடுவில், கடந்த 8ஆம் திகதி ஏற்பட்ட 30 மீற்றர் அகலமும் 15 மீற்றர் ஆழமானதுமான குழி, மிக விரைவாகத் திருத்தியமைக்கப்பட்டு, நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. ஊழியர்களின் கடுமையான அர்ப்பணிப்பின் உதவியுடன் இவ்வீதி திருத்தி அமைக்கப்பட்ட நிலையில், ஊழியர்களின் செயற்பாடு, பெரும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. திருத்துவதற்கு முன்னரும், திருத்திய பின்னரும் வீதியின் தோற்றங்களை இங்கு காணலாம்.

## தோல்வியால் துவண்டு விட்டேன்! உருக்கமாகத் தெரிவித்தார் ஹிலாரி

வொஷிங்டன், நவ.18

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தோல்வியால் துவண்டு விட்டேன் என்று ஹிலாரி கிளிண்டன் உருக்கமாகத் தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஹிலாரி எதிர்பாராத நிலையில் தோல்வியைச் சந்தித்தார். தேர்தல் முடிவுக்குப் பின்னர் அவர் எந்த ஒரு பொது நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவில்லை.

தேர்தல் முடிவு தொடர்பாக ஒரு கருத்தை மட்டும் அவர் தெரிவித்திருந்தார். ஈ-மெயில் விவகாரத்தில் அமெரிக்க புலனாய்வுத்துறை தலைவர் எடுத்த முடிவு தான் எனது தோல்விக்குக் காரணம் என்று அவர் கூறியிருந்தார்.

ஒரு வாரமாக வெளிநிகழ்ச்சிகள் எவற்றிலும் கலந்து கொள்ளாமல் இருந்த ஹிலாரி நேற்று வொஷிங்டன் குழந்தைகள் பாதுகாப்பு இல்ல நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். இதன் போது அவர் பேசியவை வருமாறு:



"இந்த விழாவுக்கு வருவது எனக்கு எளிதாக அமைந்திருக்கவில்லை. பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் தான் இந்த விழாவில் நான் கலந்து கொள் கிறேன். உங்களில் பலருக்கு தேர் தல் முடிவு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கலாம். எனக்கும் அதே நிலை தான் இருந்தது. தோல்வியால் நான் துவண்டு விட்டேன்.

இதை ஏற்றுக்கொள்வது எளிதானதாகத் தெரியவில்லை. நான் இந்தத் தேர்தல் மூலம் அமெரிக்க மக்களின் ஆன்மாவைப் புரிந்து கொண் டேன். அதுமட்டுமல்ல எனக்கு ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ளும் நிகழ்வாகவும் இது அமைந்தது.- என்றார். (ஏ)

## மிகப் பெரிய அகதி முகாமை மூடுவது பிற்போடல்

நைரோபி, நவ.18

கென்யாவில் இருக்கும் உலகின் மிகப்பெரிய முகாமான ததாப் அகதி முகாமை மூடும் முடிவை 6 மா தங்கள் பிற்போடவுள்ளதாக கென்ய அரசு அறிவித் துள்ளது.

ஐ.நாவின் அகதிகளுக் கான அமைப்பின் கோரிக்கை யைத் தொடர்ந்து இந்த அறி விப்பு வந்துள்ளது.

எனினும் சோமாலிய அகதிகளை மீண்டும் சொந்த ஊரில் குடியேற்றும் நடவடிக்கை தொடரும் என்று கென்ய உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ததாப் முகாமிலிருக்கும் அகதிகளில் பலர் சோமாலியாவுக்கு திரும்பிச் செல்வதற்கு அச்சம் தெரிவித் துள்ளனர். (ஏ)

## துருக்கி ஆசிரியர்கள் 100 பேரை வெளியேறுமாறு பாக்.உத்தரவு

இஸ்லாமாபாத், நவ.18

சர்வதேச பாடசாலைகளில் பணிபுரியும் 100 துருக்கி ஆசிரியர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

துருக்கியில் கடந்த ஜூலை மா தம் ஆட்சியைக் கவிழ்க்கத் திடீர் இராணுவப் புரட்சி நடைபெற்றது.

இந்தப் புரட்சியை ஜனாதிபதி ரிப்தாயிப் முறியடித்தார்.

இந்தப் புரட்சிக்கு அமெரிக்காவில் வசித்து வரும் மதகுரு பெதுலாகுலான் தான் காரணம் என்று ஜனாதிபதி ரிப்தாயிப் குற்றம் சாட்டினார்.

அவரது ஆதரவாளர்கள் நடத்தும் சர்வதேசப் பாடசாலைகள் பல பாகிஸ்தானில் செயற்பட்டு வருகின்றன.

அங்கு துருக்கியைச் சேர்ந்த ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

அவர்கள் துருக்கிக்கு எதிராகச் செயற்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இந்தநிலையில் துருக்கி ஜனாதிபதி பாகிஸ்தானுக்கு 2 நாள் சுற்றுப்பயணமாக அங்கு சென்றுள்ளார்.

அவர் பிரதமர் நவாசெரீப்பைச் சந்தித்துப் பேசினார்.

இதன்போது பாகிஸ் தானில் செயற்படும் அந்த பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பாக செரீப்பிடம் பேசியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதையடுத்து அங்குள்ள பாடசாலைகளில் பணிபுரியும் துருக்கி ஆசிரியர்கள்100 பேரை நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு உடனடியாக உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஏ)

## விபத்துக்கள்

முழங்காவில் வைத்திய சாலைக்கு சொந்தமான அம்புலன்ஸ் மோதியதில் காயங்களுக்குள்ளான முதியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று யாழ். பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் கொழும்புத்துறை 4ஆம் குறுக்குத் தெருவைச் சோந்த பரமசாமி குசேலரா என்ற முதியவரே காயங்களுக்கு ஆளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாச்சிக்குடா பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் காயங்களுக்கு உள்ளான நோயாளர்களை ஏற்றிக் கொண்டு வந்து கொண்டிருந்த அம்புலன்ஸ் அந்த முதியவரை வைத்தியசாலைக்கு முன்னாள் மோதித் தள்ளியது. சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்த யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

+++

யாழ்ப்பாணம், நவ. 18

குளத்துக்கு அருகில் இருந்துதுள்ளி எழும்பிய மாடு திடீரெனகுறுக்கேபாய்ந்ததால் மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் காயங்களுக்கு ஆளான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்நேற்றுமுன்தினம் இரவுவற்றாப்பளைசந்தியில் இடம்பெற்றுள்ளது.

செல்வபுரம்முல்லைத்தீவு பகுதியைச்சோந்தபரமநாதன் வில்வராஜா (வயது-51) என்ற குடும்பஸ்தரேகாயங்களுக்கு ஆளான நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-9)

+++

யாழ்ப்பாணம், நவ. 18

வீதியில்சென்றுகொண்டிருந்த சைக்கிளை பின்பக்கமாகவந்தமோட்டார்சைக்கிள் மோதியதால் காயங்களுக்கு ஆளானகுடும்பஸ்தர்ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை 8.20 மணியளவில்பலாலிவீதி திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்துக்கு முன்பாக இடம் பெற்றுள்ளது.

கோண்டாவில் வடக்குப் பகுதியைச்சேர்ந்தவீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (வயது - 35) என்றகுடும்பஸ்தரேகாயங்களுக்குஆளானவராவார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர். (ஐ-9)

# வடக்கின் புதிய அதிபர்களுக்கு நீதியான முடிவு கிடைத்தது

## முதலமைச்சருக்கு அதிபர்கள் சங்கம் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட புதிய அதிபர்களுக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நீதியான முடிவை வழங்கியுள்ளார் என்று வடமாகாண புதிய அதிபர்கள் சங்கம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கு அதிபர்களின் நிலைப்படுத்தல் தொடர்பாக முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தீர்மானம் நீதியானதாக அமைந்துள்ளது.

வடக்கு மாகாணம் மற்றைய மாகாணங்களை விட விசேடமாகப் பார்க்கப்படுகிறது. இதற்குக் காரணம் நீதியரசர் விக்னேஸ்வரன் வடக்கு மாகாணத்துக்கு முதலமைச்சராக இருப்பதாகும்.

தெரிவு செய்யப்பட்ட புதிய அதிபர்களை நிலைப்படுத்துவதில் வடக்கு மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்கள் மோசமான முடிவுகளை எடுத்திருந்தாலும், வடக்கு மாகாண முதலமைச்சர் வடக்கு அதிபர்களின் நியமனம் தொடர்பாக எடுத்த முடிவைப் பாராட்டுகின்றோம்.

அவரின் பணிப்புரைக்கமைவாக வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் வலயக்கல்வி பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்த இறுதி சுற்றறிக்கை மிகவும் நீதியாக அமைந்துள்ளது.

இதேவேளை புதிய அதிபர்கள் தொடர்பாக அவர் எடுத்த தீர்மானமே மத்திய கல்வியமைச்சின் மத்திய தீர்மானமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனவே, வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்த தீர்மானத்தின் படி வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 398 அதிபர்களுக்கும் பாடசாலைகள் வழங்கப்படுவதை நாம் ஆதரிக்கின்றோம்.

அதுவே நியாயமான தீர்வாக அமையும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். மற்ற மாகாணங்களுக்கு முன் உதாரணமாக வடக்கு மாகாணம் செயற்படும் என்று நம்பிக்கை கொள்கின்றோம்.

வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்திக்கு புதிய அதிபர்களின் பங்கு மிக முக்கியமான ஒன்றாகும்.

எனவே வடக்கு மாகாண புதிய அதிபர்களின் பாடசாலை நிலைப்படுத்தல் தொடர்பாக வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம் உறுதியாகப் பணியாற்றும். - என்றுள்ளது. (ஐ)

## 3 தங்கப்பதக்கங்கள் வென்ற மாணவி



யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி ஹமீம் ஸாதிக் பாத் திமா றிஸபுமியா சமூக விஞ்ஞானப் போட்டியில் தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

இவர் 2015 ஆம் ஆண்டும் 2016 ஆம் ஆண்டும் கோட்டம், வலயம், மாகாணத்தில் முதலாமிடத்தைப் பெற்றமையுடன், தேசிய மட்டத்தில் இரண்டு தங்கப்பதக்கங்களையும் பாடசாலை மட்டத்தில் ஒரு தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளார். (இ-19)



*யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்த முஹம்மது நாஸீர் முஹம்மது இமாஸ் மற்றும்,100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் விழா அண்மையில் பழையமாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்றது. (இ-19)*

## நீரிழிவு விழிப்புணர்வும் நடைபவனியும்

வடமராட்சி, நவ.18

நீரிழிவு தினத்தை முன்னிட்டு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நீரிழிவு விழிப்புணர்வும் நடைபவனியும் நடைபெறவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்குப் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் இருந்து ஆரம்பமாகும் விழிப்புணர்வுப் பேரணி பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதி வழியாகச் சென்று நெல்லியடி மத்திய கல்லூரியில் நிறைவடையும்.

அதனைத் தொடர்ந்து நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் நீரிழிவு சம்பந்தமான கருத்தரங்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கில் நிபுணத்துவம்மிக்க வைத்தியர்களால் கருத்துரைகள் வழங்கப்படும்.

கருத்தரங்கில்கலந்துகொள்ளும் அனைவருக்கும் நீரிழிவுப் பரிசோதனையும், அவை அடங்கிய அறிவுறுத்தல்பிரசுரங்களும் வழங்கப்படும் என்று லயன்ஸ் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-40)

# ஆறுமுகநாவலர் மாநாடு நல்லூரில் இன்று ஆரம்பம்

## நான்கு தினங்கள் காலை, மாலை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.18

இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடும் குருபூசை நிகழ்வும் இன்றுவெள்ளிக்கிழமைதொடங்கி தொடர்ந்து நான்கு தினங்கள் நல்லூர்துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை நடைபெறும் இரண்டாவது நாள் காலைநிகழ்வுகள் இளையபட்டம் பேரூர் ஆதீனத்தின் தவத்திரு மருதாசலம்அடிகளார், இணுவில் காயத்திரிபீடம் சிவஸ்ரீ தானு மகா தேவக் குருக்கள் ஆகியோர் முன்னிலையில்யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தகைசார் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகவும்,புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன்மற்றும்வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) எஸ்.யு.சந்தரகுமாரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், சைவ மகா சபையின் தலைவர் சி.சோதிமூர்த்தி, இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன், யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியத் தலைவர் ந.பரமேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலை நிகழ்வில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வரலாற்று அறிவுப் போட்டியில் திறமையை வெளிக்காட்டிய மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வும் இடம்பெறும்.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் "நாவலரின் சமயப்பணி" என்னும் தலைப்பில் கருத்தரங்கம் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்க நிகழ்வில் பேராசிரியர் இ.குமாரவடிவேல்– 'சமயசீர்திருத்தம்', கலாநிதி ஆறு. திருமுருகன் – 'சமயப் பிரசாரம்', தமிழருவி த.சிவகுமாரன்– 'சமயக் கல்வி', சைவப்புவலர் சு.செல்லத்துரை - 'சமய நூலாக்கம்', சிவமகாலிங்கம் - 'மக்கள் தொண்டு' ஆகிய தலைப்புக்களில் கருத்துரை வழங்குவர்.

மாலைநிகழ்வுகள் 4 மணிக்கு இளையபட்டம் பேரூர் ஆதீனம் தவத்திரு. மருதாசலம் அடிகளார், இந்துகுருமார்ஒன்றியத்தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் ஆகியோர் முன்னிலையில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும். இதில் கல்வி இராஜங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகவும், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் கௌரவ விருந்தினராகவும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் வே.பிறேமச்சந்திரன், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா மற்றும் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் மருத்துவர் மு.கதிர்காமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

மாலை நிகழ்வுகளில் 'சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்கம்' எனும் தலைப்பிலான நூல் வெளியீடு இடம்பெறும். அந்த நூலின் அறிமுக உரையை கலாபூஷணம் ப.சிவானந்தசர்மா நிகழ்த்துவார்.

இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்தூரன் நன்றியுரை நிகழ்த்துவார். (இ-7)

## பரிசளிப்பு விழா

பருத்தித்துறை, நவ.18

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்குப் பாடசாலை திறந்த அரங்கில் அதிபர் ப.சந்திரபாபு தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (விஞ்ஞானம்) திருமதி றோகினி கருணேஸ்வரன், ஓய்வு நிலை முன்னாள் அதிபர் அ.சா.அரியகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (ஐ-40)

## நாவலர் சோலை கலை விழா

யாழ்ப்பாணம், நவ.18

யாழ்ப்பாணம், நீராவியடி, சைவபரிபாலன சபையின் நாவலர் சோலை முன்பள்ளியின் கலை விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் சைவ பரிபாலன சபையின் நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

முன்பள்ளிச் சிறாரின் நடனம், நாட்டிய நாடகம், குழுப் பாடல்கள் உட்படப் பல கலை நிகழ்வுகள் இதில் இடம்பெறும்.

# குசல் பெரேராவின் ஊக்க மருந்து விவகாரம்: பரிசோதனை நிலையத்துக்கு இடைக்காலத் தடை




இலங்கை கிரிக்கெட் வீரர் குசல் ஜனித் பெரேரா தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தினார் என்று தவறான அறிக்கை வழங்கிய கட்டார் ஆய்வு கூடத்திற்கு உலக ஊக்கமருந்து தடுப்பு நிறுவனம் (வாடா) இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இந்தத் தடை நவம்பர் 7 ஆம் திகதி முதல் நான்கு மாதங்களுக்கு அமுலில் இருக்கும் என வாடாவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் குறிப்பிட்ட திகதியிலிருந்து கட்டார் ஆய்வுகூடத்தில் சிறுநீர் மற்றும் இரத்த மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

தடை அமுலுக்கு வரும் வரையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மற்றும் ஆய்வுக்குத் தயாராகவுள்ள மாதிரிகள் வாடாவின் அனுமதிக்கப்பட்ட மற்றொரு முகவர் ஆய்வு கூடத்திற்கு பத்திரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று தற்காலிகத் தடைக்குள்ளான கட்டார் ஆய்வுகூடத்திற்கு வாடா உத்தரவிட்டுள்ளது.

ஆய்வுகள் உயர் நிலையில் நடத்தப்படுவதை உறுதி செய்யும் நோக்கிலும் விளையாட்டு வீர, வீராங்கனைகள் மத்தியில் ஆய்வுகள் தொடர்பான நம்பகத்தன்மையை உயர்த்தும் நோக்கிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வாடா நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் கத்தார் ஆய்வுகூடம் தனது தடைக்காலத்தில் சீர்திருத்த நடவடிக்கைகளை முறையாக பேணியுள்ளதை நிரூபித்தால் மீள் அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும் என வாடா குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும் வாடாவின் 13.7ஆம் இலக்க விதிகளுக்கு அமைய, தடைக்கான தகவல் கிடைத்த 21 நாட்களுக்குள் விளையாட்டுத்துறை நியாயாதிக்க சபையிடம் கட்டார் ஆய்வுகூடம் மேன்முறையீடு செய்ய முடியும்.

வாடாவின் அனுமதியைப் பெற்றுள்ள 34 ஆய்வுகூடங்களில் தடைக்குள்ளான ஏழாவது ஆய்வுகூடம் கட்டார் ஆய்வு கூடமாகும். பெய்ஜிங், ஆல்மட்டி, புளூம்ஃபொன்டெய்ன், லிஸ்பன், மட்றிட், ரியோ ஆகிய நகரங்களில் இயங்கி வந்த ஆய்வுகூடங்களுக்கு இதற்கு முன்னர் வாடா தடை விதித்திருந்தது.

இதேவேளை, குசல் ஜனித் பெரேரா தொடர்பாக தவறான அறிக்கை சமர்ப்பித்த கட்டார் ஆய்வுகூடம் தொடர்பாக வாடா நிறு வனம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என அண்மையில் இலங்கை வருகைத் தந்திருந்த வாடாவின் பிராந்திய உறவுகள் பிரதிப் பணிப்பாளர் டொம் மேயிடம் மெட்ரோ ஸ்போர்ட்ஸ் வினவியபோது,

"அது தொடர்பாக வாடாவின் சட்டப் பிரிவே நடவடிக்கை எடுக்கும். வாடா வின் வேறு பிரிவில் நான் கடமையாற்றுவதால் அது குறித்து நான் அறிந்திருக்கவில்லை" என்று பதிலளித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

குசல் ஜனித் பெரேரா தொடர்பாக கட்டார் நிறுவனம் வெளியிட்டிருந்த ஆய்வு அறிக்கை தவறானது எனவும் அதனை வாபஸ் பெறுவதாகவும் சர்வதேச கிரிக்கெட் பேரவை கடந்த மே மாதம் 11 ஆம் திகதி அறிவித்தது. இதனை அடுத்து குசல் ஜனித் பெரேராவுக்கு விதிக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடையும் உடனடியாக நீக்கப்பட்டது.

இந்த சம்பவத்தினால் குசல் பெரேரா எதிர்கொண்ட சொல்லொணா துயரங்களுக்கு வருந்துவதாக சர்வதேச கிரிக்கெட் பேரவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவ் ரிச்சர்ட் சன் தெரிவித்துள்ளார்.

குசல் ஜனித் பெரேரா வுக்கு கேடு விளைவிக்கும் வகையில் வெளியிடப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையை கட்டாரில் இயங்கும் ஆய்வு கூடம் வாபஸ் பெற்றதை அடுத்தே ஒழுக்காற்று நடவடிக்கைகளை நிறுத்தியுள் ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## இறுதிப்போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரனை சந்திக்கிறது நாவாந்துறை சென்.மேரிஸ் கழகம்



'மெலிஞ்சிமுனை இருதயராஜா உதைபந்தாட்டத் தொடர் 2016' க்கான அரையிறுதிப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகத்தை 5:0 கோல்களினால் வெற்றி கொண்டுள்ளது. இந்த வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியு ள்ள நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டு கழகம் இறுதிப் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டு கழகத்தை எதிர்கொள்ளவுள்ளது.

## திடமான நிலையில் இந்திய அணி

இந்தியா, இங்கிலாந்து மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 4 விக்கட்டுகளை இழந்து 317 ஓட்டங்களை பெற்றுள்ளது.

இந்திய அணியின் முதல் இரண்டு விக்கட்டுகளும் 22 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்ட நிலையில், 3 ஆவது விக்கட்டுக்காக இணைந்த புஜாரா, கோஹ்லி ஜோடி 226 ஓட்டங்களை பகிர்ந்தது.

புஜாரா 119 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து வந்த ரஹானே 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முதல்நாள் ஆட்டநேர முடிவின் போது இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் நின்ற கோஹ்லி 151 ஓட்டங் களை பெற்றுள்ளதுடன், அஸ்வின் ஒரு ஓட்டத்துடன் களத்தில் உள்ளார்.

## பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 'மாமனிதர்' குமார் பொன்னம்பலம் உதைபந்தாட்டத் தொடர்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 'மாமனிதர் குமார் பொன்னம்பலம்' வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடர் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 05 ஆம் திகதி இடம்பெறவுள்ள இப் போட்டித் தொடருக்கான போட்டி அட்டவணை 02 ஆம் திகதி தயாரிக்கப்படவுள்ளது.

எனவே போட்டியில் பங்கு பெற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் விண்ணப் பங்களை அனுப்புமாறு ஐக்கிய விளையாட்டுக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

ஏழுபேர் கொண்ட இவ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி வடமராட்சி ரீதியில் நடத்தப்படும் மாபெரும் போட்டியாக அமைந்துள்ளது.

விலகல் முறையில் நடைபெறும் போட்டித் தொடரில், ஒவ்வொரு கழகத்தில் இருந்தும் இரண்டு அணிகள் பங்கு பற்ற முடியும். விண்ணப்பம் வழங்கும் போதே 'ஏ','பி' அணிகள் தெளிவாக குறிப் பிடப்பட வேண்டும் என்று ஐக்கிய விளையாட்டுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

முதல் இரு சுற்றுக்களும் 20.05.20 நிமிடங்களும் அரை இறுதி, இறுதி ஆட்டங்கள் 30.10.30 நிமிடங்களும் மின்னொளியில் இடம் பெறும். போட்டி விதிகள் தொடர்பில் ஐக்கிய விளையாட்டுக்கழம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விளையாட்டுக்கு உகந்த கட்டுப்பந்து கொண்டு வரப்பப் படுவதுடன், உரிய நேரத்திற்கு சமுகம்தர வேண்டும்.

போட்டியில் சமுகம் தராத அணியினர் தண்டப்பணமாக 5 ஆயிரம் ரூபா செலுத்துதல் வேண்டும்.

மேலும், மத்தியஸ்தரின் தீர்ப்பே இறுதியானது. ஆட்சேபனை மனுக்கள் ஆயிரம் ரூபா கட்டணத்துடன் 2 மணித்தியாலங்களுக்குள் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

மஞ்சள் அட்டை காட்டப்பட்டால் 300 ரூபாவும் சிவப்பு அட்டை காட்டப்பட்டால் 500 ரூபாவும் செலுத்தப் படவேண்டும்.

சுற்றுப்போட்டி விதிகளுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் விதிமுறைகள் பின்பற்றப் படும், விளையாட்டு வீரர்கள் மீது போதைக் குற்றம் சுமத்தப்படின் பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர். அத்துடன், விண்ணப்பக் கட்டணம் 1500 ரூபா அறவி டப்படும் என்றும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அறிவித்துள்ளது. மேலதிக தொடர்புகளுக்கு 0773792196, 07737 92196 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# பவுன்சர் பந்து தலையில் தாக்கியது: ஆஸி. வீரர் மருத்துவமனையில் அனுமதி



பெர்த், நவ.18

ஆஸ்திரேலியாவில் இடம் பெற்ற உள்ளூர் கிரிக்கெட் போட்டியின் போது பவுன்சர் பந்து தலையில் தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில், ஆடம் வோக்ஸ் என்ற வீரர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் உள்ளூர் முதல்தர கிரிக்கெட் தொடரான ஷெபீல்ட் ஷீல்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

நேற்று பெர்த்தில் இடம்பெற்ற போட்டியில் வெஸ்டர்ன் ஆஸ்திரேலியா-டாஸ்மேனியா அணிகள் மோதின.

இந்தப் போட்டியின் போது ஆடம் வோகஸ், கேமரான் ஸ்டீவன்சன் வீசிய பவுன்சர் பந்தை அடிக்க முடியாமல் குனிந்தார்.

அப்போது எதிர்பாராத விதமாக பந்து தாக்கியதில் நிலைகுலைந்த வோகஸ் சுருண்டு கீழே விழுந்துள்ளார்.

உடனடியாக முதலுதவி சிகிச்சைகள் அளிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டு களுக்கு முன் பவுன்சர் பந்து தாக்கியதில் பிலிப் ஹியூக்ஸ் மரணமடைந்தது குறிப்பிடத் தக்கது. வோக்ஸ் 16 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் பந்து தாக்கியதால் அவருக்கு போட்டியில் இருந்து ஓய்வு அளிக்கப்பட்டு, மாற்று வீரர் களமிறக்கப்பட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இதே ஷெபீல்ட் ஷீல்ட் போட்டியின்போதுதான், பிலிப் ஹியூக்ஸ் பவுன்சர் பந்து தாக் கியதில் உயிரிழந்திருந்தார்.

# ஆர்ஜென்டினாவை காப்பாற்றிய மெஸ்ஸியின் 'ப்ரீ கிக்' கோல்



உலகக்கிண்ண கால்பந்து போட்டியின் தகுதிச் சுற்றுப் போட்டியில் ஆர்ஜென்டினா வின் மெஸ்ஸி அடித்த பிரீ கிக் கோல் தற்போது இணையத் தில் வெளியாகி வைரலாக பரவி வருகிறது.

எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால்பந்து போட்டி ரஷ்யாவில் நடைபெற உள்ளது. இதற் கான தகுதிச் சுற்றுப் போட்டி யில் கடந்த செவ்வாய்க்கிழமை கொலம்பியா அணியும், ஆர்ஜென்டினா அணியும் மோதின.

அர்ஜென்டினா அணி கடந்த வாரம் பிரேசில் அணியுடன் நடந்த தகுதிச் சுற்றுப் போட்டி யில் 3-0 என்ற கணக்கில் தோல்வியைச் சந்தித்ததால் இப் போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. அதன் படி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் தங்களுடைய சிறப்பான ஆட்டத்தை செயற் படுத்தி வந்தனர். இதன் காரணமாக கோல் அடிப் பதற்கு இரு அணி வீரர்களும் கடுமையாக போராடினர். இந்நிலையில் தன்னுடைய மாயஜாலத்தை காட்டுவதற்கு மெஸ்ஸி ஆயத்தமானார். அதே போல் ஆட்டத்தின் முதல் பாதி முடிவதற்கு பத்து நிமிடங் களுக்கு முன்னர் மெஸ்ஸி அடித்த பீரி கிக் கோலால் அரங்கமே அதிர்ந்தது.

அதன் பின்னர் இரண்டாவது பாதியில் மெஸ்ஸியின் உதவி மூலம் இரண்டு கோல்களை அடித்து ஆர்ஜென்டினா அணி 3-0 என்ற கோல் கணக்கில் கொலம்பியாவை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலம் ஆர்ஜென்டினா அணி உலகக்கிண்ண போட்டிக்கு தகுதி பெறும் வாய்ப்பு பிரகாச மாகியுள்ளது.



# அரை இறுதியில் ஜோகோவிச்

உலக ஆண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் ஜோகோவிச் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தரவரிசையில் முன்னிலையில் உள்ள வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் ஏ.டி.பி. உலக சுற்றுலா இறுதிச் சுற்று என்று அழைக்கப்படும் ஆண்கள் டென்னிஸ் சாம்பியன் ஷிப் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டியில் வீரர்கள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு மோது கிறார்கள். இரு பிரிவுகளிலும் இடம்பெற்ற போட்டி களின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் வீரர்கள் அரைஇறுதிக்குத் தகுதி பெறுவார்கள்.

இதில் 'இவான் லென்டில்' பிரிவில் கடந்த செவ்வாயன்று இரவு நடந்த ஒரு ஆட்டத்தில் 2 ஆம் நிலை வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா), மிலோஸ் ராவ்னிக்கை (கனடா) எதிர்கொண்டார்.

இந்த மோதலில் ஜோகோவிச் 7-6 (8-6), 7-6 (7-5) என்ற செட் கணக்கில் ராவ்னிக்கை வீழ்த்தி 2 ஆவது வெற்றியுடன் முதல் வீரராக அரை இறுதிக்குள் நுழைந்துள்ளார்.


# ஆட்டநிர்ணய மோசடிகளைத் தடுக்க புதிய நடவடிக்கை

ஆட்ட நிர்ணய மோசடிக ளைத் தடுக்கும் நடவடிக்கை யாக சந்தேகத்துக்குரிய வர்கள் கையடக்க தொலை பேசி களையும் இலத்திரனியல் கருவிகளையும் கட்டாயம் ஒப்படைக்கவேண்டும் என நிர்ப்பந்திக்கப்படவுள்ளனர்.

வட்ஸ் அப், ஸ்னப்சட் ஆகியவற்றின் மூலம் அனுப் பப்படும் தனிப்பட்ட தகவல் களை இறக்கம் செய்வதற் கான அதிகாரத்தை சர்வதேச கிரிக்கெட் பேரவையின் மோசடி தடுப்புப் பிரிவு பெற வுள்ளது.

இதற்கான பிரேரணை முன்மொழியப்பட்டுள்ளதுடன் அடுத்த வருட முற்பகுதியில் இதற்கான அங்கீகாரத்தை சர்வதேச கிரிக்கெட் பேரவை வழங்கும் என நம்பப்படு கின்றது.

"உலகம் மாற்றம் அடைந்து வரும் நிலையில் வட்ஸ் அப், ஸ்னப்செட் உட்பட பல்வேறு வகைகளில் ஊடகங்களில்




தகவல் பரிமாற்றங்கள் இடம் பெறுகின்றன. இந்த விடயங் கள் குறித்து உன்னிப்பாக கவனிக்க வேண்டும்" என மோசடி தடுப்புப் பிரிவின் தலைமை அதிகாரி ரொனி ப்ளனகன் தெரிவித்துள்ளார்.

"வெறுமனே வீரர்களின் விலைப்பட்டியல்களைப் பரீட்சிக்காமல் டென்னிஸ் விளையாட்டில் போன்று அவர்களது நுண்கருவிக ளைப் பெற்று அவற்றை இறக்கம் செய்து அவர்க ளுடன் என்னவகையான தொடர்பாடல்கள் இடம்பெற் றுள்ளன என ஆராய வேண்டும்" என ரொனி மேலும் தெரிவித்துள்ளார்.

வீரர்கள் மற்றும் வீராங்க னைகளது சந்தேகத்துக்குரிய செயற்பாடுகள் குறித்து டென்னிஸ் ஒழுக்க நெறி பிரிவு கண்காணிப்பது போன்று மோசடி தடுப்புப் பிரிவிலும் அதிகாரங்கள் விரிவாக்கப்படவுள்ளது.

விசாரணைக்குள்ளாகும் வீரர்களிடமிருந்து கையடக்கத் தொலைபேசி பதிவுகள் உட்பட தகவல்கள் தற்போது கோரப் பட்டுவருகின்றன.

எனவே, கூடுதல் அதி காரங்களைப் பெறும் பொருட்டு சர்வதேச கிரிக்கெட் பேரவையுடன் மோசடி தடுப்புப் பிரிவினர் மேலோட் டமாக கலந்துரையாடியுள் ளனர்.

மறுபுறத்தில் மோசடிக ளைத் தடுப்பதற்கான விசார ணைகளில் சர்வதேச கிரிக் கெட் பேரவையும் ஈடுபட்டு வருகின்றது.

# கபடி லீக் போட்டியில் சென். தோமஸ் 'ஏ' அணி முன்னிலை

வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை நகர அபிவிருத்திச் சங்கம் சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக் கழகம் கபடி லீக் போட்டியை நடத்தி வருகிறது.

லீக் முறையில் நடத்தும் இந்தக் கபடிச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டி ஒன்றில் முனை சென். தோமஸ் 'ஏ' அணி, பலாலி விண்மீன் 'பி' அணியை எதிர் கொண்டது. விறுவிறுப்பாக ஆரம்பித்த போட்டியில்சென்தோமஸ்'ஏ'அணி 106:22 என்ற புள்ளிகள் வித்தி யாசத்தில் பெரும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

இத்தொடரில் தொடர்ந்து இருபோட்டிகளில் வெற்றி பெற்றதனால் 8 புள்ளிகளுடன் 'ஏ' பிரிவில் பருத்தித்துறை முனை சென். தோமஸ் முன்னிலைவகிக்கின்றது.





# ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரானார் பசில் ராஜபக்ஷ!

கொழும்பு, நவ.18

முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் அவருடன் மேலும் சிலரும் நேற்றையதினம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்புரிமையைப் பெற்றுள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது பசில் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

'மலர் மொட்டு' சின்னத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, கட்சியை பசில் வழிநடத்துவார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதன்காரணமாக, பசிலின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கூட்டு எதிரணியின் மஹிந்த ஆதரவு அணி எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி எனும் பெயரில் புதிய கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டு எதிரணி தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இந்த புதிய அரசியல் கட்சியைப் பயன்படுத்திக் கொள்ளப் போவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்தக் கட்சியில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## இடைநடுவில் யாழ்தேவி நிறுத்தப்பட்டதால் அனுராதபுரத்தில் மக்கள் பெரும் அவதி

அனுராதபுரம், நவ.18

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த யாழ்தேவியின் சாரதி, ரயிலை அனுராதபுரம் ரயில் நிலையத்தில் நிறுத்தி விட்டு இறங்கிச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றைய தினம் இடம்பெற்ற ரயில்வே சாரதிகளின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக வடக்கு ரயில் சேவைகள் அனுராதபுரம் வரை மட்டுப்படுத்தப் பட்டுள்ளன எனத் தகவல்கள் வெளியாகின.



இதன் காரணமாகவே சாரதி ரயிலை அனுராதபுரம் ரயில் நிலையத்தில் நிறுத்திவிட்டுச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது.

எனினும், பயணிகளிடம் யாழ்ப்பாணம் வரை செல்வதற்கான கட்டணம் அறிவிடப்பட்டிருந்த போதிலும் திடீரென ரயிலை இடைநடுவில் நிறுத்தியமையால் பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகினர். அவர்கள் வேறு பயண ஏற்பாடுகள் இன்றித் தவித்துள்ளனர்.

இதனால் அனுராதபுர ரயில் நிலையத்தில் நேற்று மதியம் பரபரப்பு நிலவியது.

## ரோஹித அபே குணவர்த்தனவுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, நவ.18



முன்னாள் அமைச்சர் ரோஹித அபே குணவர்த்தனவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கி கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நிசாங்க பந்துல கருணா ரத்ன நேற்று பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்காக இவர் நீதிமன்ற அனுமதியைக் கோரியிருந்த நிலையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் 415 லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களைச் சம்பாதித்துள்ளார் என்று லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் இவருக்கெதிராக வழக்கு தொடரப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆயுதங்களுடன் மூவர் கைது!



கொழும்பு, நவ.18

வெலிகம தெஹிபிட்டிய கடேவத்த பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்றில் ஆயுதங்களுடன் பயணித்த மூவரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெலிகம பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய திடீர் வீதித் தடைகளை ஏற்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து ரிவோல்வர், அதற்குரிய 5 தோட்டாக்கள் மற்றும் கைக்குண்டு ஒன்று ஆகியவற்றைப்பொலிஸார்கைப் பற்றியுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் வலஸ்முல்ல, மித்தெனிய மற்றும் வெலிகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் மூவரும் இதற்கு முன்னர் சிறைத்தண்டனை பெற்று வந்திருந்தனர் என்றும் இவர்கள் இரு வாரங்களுக்கு முன்னர் விடுதலையாகியிருந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக காத்திருக்கும் 3 ஆயிரம் இருதய நோயாளர்கள்!

காலி, நவ.18

காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமையால் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இருதய நோயாளர்கள் சிரமத்துக்கு ள்ளாகி உள்ளனர்.

இந்தச் சத்திர சிகிச்சைப் பிரிவில் ஒருவித நோய்க் கிருமி பரவி வருவதன் காரணமாகக் கடந்த 9 ஆம் திகதி முதல் சத்திரசிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் குறித்த



சத்திரசிகிச்சைப் பிரிவு மூடப்பட்டிருந்தமையால் இருதய சத்திர சிகிச்சை நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும், சத்திர சிகிச்சை மேற்கொள்ள உள்ளவர்களின் பட்டியல் 2020 ஆம் ஆண்டு வரை நீண்டுள்ளது எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இருதய சத்திர சிகிச்சை நோயாளர்கள் தங்கியிருக்கும் விடுதிகளில் சில சமயங்களில் தண்ணீர் விநியோகம் இருப்பதில்லை எனவும் இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில் இன மோதலை ஏற்படுத்த சதித் திட்டம்!

### பின்னணியில் அரசியல்வாதிகள் இருக்கின்றனர் என முதலமைச்சர் நசீர் அஹமட் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.18

கிழக்கில் இன மோதலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் திட்டமிட்ட வகையில் சிலரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் *தெரிவித்துள்ளார்.*

இது தொடர்பில் அவர் நேற்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு:-

இந்தச் சதிகாரர்களுக்குக் கிழக்கில் உள்ள சில அரசியல்வாதிகளும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அதற்கான ஆதாரங்கள் தற்போது வெளிப்பட்டு வருகின்றன. அவர்களின் உண்மையான முகங்களை மக்கள் அடையாளம் காண்பதற்கு இதுவே சரியான தருணமாகும்.



அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீகப் பகுதிகளில் ஆங்காங்கே திடீரென முளைக்கும் புத்தர் சிலைகள் மற்றும் மட்டக்களப்பில் பலவந்தமாக பௌத்த குடியேற்றங்*களை நிறுவ முனைதல் ஆகிய* விடயங்கள் சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை மக்களிடையே திட்டமிட்ட வகையில் மோதலை ஏற்படுத்த முன்னெடுக்கப்படும் சதித்திட்டங்களாகும்.

யுத்தத்தைக் காட்டித் தமது பிழைப்பை நடத்திய அரசியல்வாதிகளுக்கு யுத்தமொன்று இல்லாத போது தமக்கு அரசியல் நடத்துவதற்கு முடியாது என்ற யதார்த்தத்தை உணர்ந்துகொண்டு இனங்களிடையே விரிசலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து வருகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளை அரசு முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இனவாதச் செயற்பாடுகளை முன்னெடுப்போருக்கு எதிராகச் சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## 275 வழக்குகளுடன் தொடர்புடையவர் கைது!

கொழும்பு, நவ.18

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக உறுதியளித்து சுமார் 45 மில்லியன் ரூபாவை மோசடி செய்தார் எனக் கூறப்படும் நபரொருவர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவால் கைது செய்யப் *பட்டுள்ளார்.*

இந்நபருக்கு எதிராக 275 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பணியகம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் வத்தளை பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில்நேற்று வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் இரண்டாம்வாசிப்புமீதானஐந்தாம் நாள் விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இரண்டு பிரதான கட்சிகளும்- ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலானஐக்கியதேசியக் கட்சியும் இணைந்து இந்த வரவு -செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளார்கள். அமைச்சரவையில் இரண்டுபிரதானகட்சியைச்சேர்ந்த உறுப்பினர்களும் இருக்கின்றார்கள்.

இந்த இரண்டு கட்சி உறுப்பினர்களும் சமூக, அரசியல் ரீதியாகத் தற்போது இணைந்திருக்கின்றார்கள். 2015 ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும், அதன் பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும்தற்போதைய ஆட்சியாளர்களுக்கு இணைந்து செயற்படுவதற்கானஇறைமையின் அடிப்படையிலானமக்கள்ஆணை கிடைக்கப்பெற்றுள்ளது.

உண்மையானஜனநாயகத்தைப் பாதுகாத்து, நாடு ஆட்சிசெய்யப்பட வேண்டும் என்பதே இந்த நாட்டிலுள்ள அனைவரினதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

நிரந்தர சமாதானம், சுதந்திரம் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு என்பவற்றுக்காக ஜனநாயகம், அடிப்படை உரிமைகள், நல்லிணக்கம்மற்றும்அபிவிருத்திபோன்றவற்றைஉறுதிப்படுத்துவதற்குரிய எமது அரிய முயற்சியில் தொடர்ந்தும்முன்னேறிச்செல்வோம்.அடிப்படையில் எமது நாடு பரஸ்பர மரியாதை மற்றும் கலந்துரையாடல் மீது உருவாக் கப்படுகின்ற, நீடித்து நிலைக்கும் சமாதானத்துக்கான ஒரு புதிய தூரநோக்கினால் வழிபடுத்தப்படுகின்றது.

அச்செயற்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகள்அடங்கலானஅனைத்து பிரதான அம்சங்க ளையும் உள்ளடக்கிய ஓர் இலக்கு நோக்கிய சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை உருவாக்கி உள்ளோம்.

### புதிய முயற்சி

தற்போதைய அரசானது நான் ஏற்கனவேகுறிப்பிட்டமை போன்று இந்த நாட்டுக்குப் பொருளாதாரம், அரசியல்மற்றும் சமூகஎதிர்காலம் தொடர்பில் புதிய பாதை ஒன்றை ஏற்படுத்தக் கடமைப்பட்டுள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் இந்த நாட்டை மாறி மாறி ஆட்சிசெய்து வந்துள்ள இரு பிரதான கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் புதிய அரசமைப்பொன்றை இயற்றும் முயற்சிஒன்றில் முதற்தடவையாக அவை ஈடுபட்டுள்ளன.

ஏனைய அரசியல் கட்சிகளினதும் அதேபோல் இந்த நாட்டு மக்களினதும் இணக்கப்பாட்டுடன் - ஐக்கியதேசியக்கட்சியும்ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும்ஒன்றுபட்டு-இந்த நாட்டுக்குப் புதிய அரசமைப் பொன்றை உருவாக்கும் கூட்டு முயற்சிஒன்றுமுன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது, இதற்கு முன்னதாக இடம் பெற்றிராத புதியதொரு விடயமாகவுள்ளது. பிளவுபடாத தனியொரு பிரத்தியேகநாடுஎன்றகட்டமைப்புக்குள்அதிகபட்சசாத்தியமானஇணக்கப்பாடுகளின் அடிப்படையிலானதாக இது அமைந்திருக்கும்.

### எமது ஒப்புதல் இல்லை

இந்த நாட்டில் இதற்கு முன்னதாக மூன்று அரசமைப்புக்கள் இயற்றப்பட்டுள்ளன. 1947ஆம் ஆண்டுஅரசமைப்பொன்றுஇயற்றப்பட்டது.

அதன் பின்னர் 1972 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில்அதனதுகூட்டணிக் கட்சிகளும் இணைந்து அரசமைப் பொன்றை இயற்றியிருந்தன.

1978 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியால் அரசமைப்பொன்று இயற்றப்பட்டது.

இதில் 1972, 1978 ஆம் ஆண்டுகளில் அரசமைப்பு உருவாக்கப்பட்ட இரு சந்தர்ப்பங்களிலும் அந்தந்த காலப்பகுதியில் இருந்த அரசுகள் அப்போதைய பிரதான எதிர்க்கட்சியின்இணக்கப்பாட்டைப் பெற்றிருக்கவில்லை.

அதுமட்டுமல்லாது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்க்கட்சிகளின்ஒப்புதலும்அந்த அரசமைப்பு உருவாக்கங்களின் போது பெறப்பட்டிருக்கவில்லை.

### எதிர்பார்ப்பு

பிளவுபடாத தனியொரு நாடு என்ற கட்டமைப்புக்குள் பரவலான இணக் கப்பாட்டின் அடிப்படையில் உருவாகும்இந்தஅரசமைப்பானது நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும்என்று முதல்தடவையாக எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

வரலாற்றில்முதற்தடவையாகப் பெரும்பான்மையானதமிழ்மக்கள் - குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கைப்பிரதிநித்துப்படுத்தும்கட்சியான எனது தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் - இந்த அரசமைப்புஉருவாக்கச்செயற்பாடுகளில் பங்கெடுத்துள்ளனர்.

### அனுமதிக்க முடியாது

யுத்தத்துக்கு முன்னரும் சரி, அதற்குப் பின்னரும் சரி வடக்கு, கிழக்கு என்பது நீண்டகாலமாக மிகவும் புறக்கணிக்கப்பட்ட பிரதேசங்களாகவே இருக்கின்றன.

வடக்கு மற்றும் கிழக்கில் இடம் பெயர்ந்தமக்களின்காணிகள்மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது, 2017 ஆம் ஆண்டுக்குள்அம்மக்களின்புனர்வாழ்வு, வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரம் அனைத்தும் பூர்த்தி செய்யப்படவேண்டும்.பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுப்புகளும் கஷ்டங்களும்தொடர்ச்சியானநிகழ்வுகளாகஇருக்கஅனுமதிக்கமுடியாது.

எதிர்பார்புகளுடன் பொறுமையாகக் காத்திருந்து மக்கள் களைப் படைந்து விட்டனர்.

ஆகவே,மேற்படி விடயங்கள் விரைந்துபூர்த்திசெய்யப்படவேண்டும்.வடக்குமற்றும்கிழக்கில்இருந்து நாடாளுமன்றத் துக்குத் தெரிவாகியுள்ள 18 எம்.பி.க்களில் 16 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர்.

இந்தத் தெரிவானது 90 இற்கும் அதிகமான சதவீதமாகும். நாம் அரசில் இல்லாத போதிலும் நான் சுட்டிக்காட்டியபணி இலக்குகளைப் பூர்த்திசெய்வதற்கு நாம் அரசுடன் இணைந்து பணியாற்றத்தயாராக இருக்கிறோம். இந்த பணி இலக்குகளைப்பூர்த்திசெய்வதற்குஅரசு செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

### இணைந்து பணியாற்ற வேண்டும்

வடக்கு மற்றும் கிழக்குக்கு விரிவான செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்றைஅரசு ஏற்படுத்த வேண்டும். அத்துடன், இந்தபணி இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் நிமித்தம்அந்தப்பிரதேசங்களில்இருந்து மக்களால்தெரிவுசெய்யப்பட்டபிரதிநிதிகளுடன் அரசு இணைந்து பணியாற்றவேண்டும். அந்தவகையில் மேற்படிபிரதேசங்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும்16உறுப்பினர்கள் எனது கட்சியில் அங்கம் வகிக்கின்றனர்.

அவ்வாறான முன்னெடுப்பொன்று இடம்பெறும் பட்சத்தில் அந்த நிகழ்ச்சித் திட்டம் பயனளிப்பதைஉறுதிப்படுத்தஎம்மால்முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற் கொள்வோம் என்று வலியுத்துகி றோம். இந்த விடயம் நாம்தொடர்ந்தும்தட்டிக்கழிக்கமுடியாதபணி இலக்காகும். நாம் இதில் ஆக்கபூர்வமானவகிபாகமொன்றை மேற்கொள்வோம்.

### வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம்

வடக்கில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற விடயத்திலும் உறுதியானமுன்னேற்றத்தைஎதிர்பார்க்கிறோம். வடக்கின்முஸ்லிம்சமூகப் பிரதிநிதிகள், மீள்குடியேற்றமற்றும் புனர்வாழ்வு அமைச்சரின் உத்தியோகபூர்வபிரதிநிதிகள்,வடமாகாண முதலமைச்சரின்உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் இந்த விடயத்திலான சிக்கல்களைநிவர்த்திசெய்துகொள்வதற்காகச் செயற்படுவார்கள்.

அதன்மூலம்முஸ்லிம்மக்களின் மீள்குடியேற்ற விடயம் விரைவில் பூர்த்தியாகும் என்றும் நாம் நம்புகிறோம்.

முஸ்லிம் மக்களின் துயரங்கள் தொடர வேண்டும் என்று நாம் கருதவில்லை. அதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினதும் தமிழ் மக்களினதும் கொள்கையாகும். வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து சென்றமுஸ்லிம்மக்கள்சகலவசதிகளுடனும் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.

### புதிய அரசமைப்பு

இந்தநாடுவிரைவில்புதிய அரசமைப்பொன்றைப் பெற்றிருக்கும் என்று நாம் நம்புகிறோம். அந்த அரசமைப்புஇலங்கையின்அனைத்து சமூகத்தினர் மத்தியிலும் பெரும்பான்மையாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருக்கவேண்டும்.

தமிழ், முஸ்லிம்மற்றும்சிங்களம் எனஎந்தஇனத்தவராகஇருந்தாலும் இலங்கையர் என்று தங்களைப் பெருமையாக அடை யாளப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இது அமைந்திருக்க வேண்டும்.

அத்துடன், மக்களின்அவரவரது கலாசார, மொழிமற்றும்மத அடையாளங்களையும் அது உறுதிப்படுத்த வேண்டும். நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

### படுகடன்கள்

தற்போது 9 பில்லியன் ரூபாய் படுகடனாகக் காணப்படுகின்றது. எமது நாட்டின் தற்போதைய வருமானம் அதனைச் செலுத்தவே போதுமானதாகவுள்ளது.

கடந்தகாலத்தில்அளவுக்குமிஞ்சியசெலவுகள், இரட்டிப்பாக்கப்பட்ட செலவுகள், பெருமளவுவட்டிக்கான கடன்கள், ஊழல்கள் என்பனவற்றால் தான் படுகடன் தொகை அதிகமானது. எனினும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக அத் தொகையைக் குறைக்க வேண்டியுள்ளது.

## கடும் போக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை எழுச்சிபெறச் செய்வதற்கான ஒரே கருத்துடன் இயங்கியவை என்று கூறப்படுகின்றது.

தனித்தனியாக பிரிந்திருந்து போராட்டங்களை முன்னெடுப்பதை விடவும், ஒன்றுபட்டு புதிய தலைமையின்கீழ்தமது கருத்தை முன்வைப்பதுதான் பொருத்தமானது என இந்த பிக்குகள் அமைப்புக்கள்தீர்மானித்துள்ளன.

புதிய தேரர்கள் பிரிவை உருவாக்குவது தொடர்பாக இந்த அமைப்புக்கள் கடந்த இரண்டு மாதகாலமாக நீண்ட கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றன எனத் தெரியவருகின்றது.

பிரதேச ரீதியில் பல்வேறு மட்டத்தில் சமூக விரோத செயல்களுக்கு எதிராக செயற்பட்ட சிறிய பிக்குகள் குழுக்களும், தேசிய மட்டத்தில் செயற்படும் பௌத்த பிக்குகள் குழுக்களும் இந்த கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய பிக்குகள் பிரிவொன்றை (நிகாயா) பிரகடனப்படுத்தியதன் பின்னர், அதற்கு மகாநாயக்க தேரராகயாரைநியமிப்பதுஎன்பது தொடர்பாகவும் இந்த முற்போக்கு பிக்குகளின்கலந்துரையாடல்களில் ஆலோசிக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய ரீதியில் செயற்படும் பல பிக்குகள் அமைப்புகளிலிருந்து அதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பிரிவின் அறிவிப்புடன் பதிவாளர் ஒருவரும் செயற்குழுவொன்றும் நியமிக்கப்பட்டு அவற்றைப் பகிரங்கப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

## சிங்களர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ, புதிய கட்சியில் தானும் இணைந்துகொண்டார் என்று கூறினார். பொதுமக்களும் இதில் இணைந்துகொள்ளவேண்டும்என்று கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

இன்று பாதுகாப்பு தொடர்பாக அனைவரிடையேயும் அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. அந்த அச்சநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அன்றுமுஸ்லிம் மக்கள்வடக்குக்குச் செல்லமுடியாதநிலைஏற்பட்டது. 48 மணித்தியாலங்களுக்குள் வெறும் இரண்டு பொலித்தீன் பைகளில் தங்களது பொருட்களை எடுத்துக் கொண்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து வெளியேறினர்.

அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களை சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதற்கு மஹிந்த ராஜபக்ஷவே முதற்கட்ட நடவடிக்கைளை மேற்கொண்டார். எனினும் மீண்டும் அந்த அபாயநிலை உருவாகியுள்ளது.

அவ்வப்போது வெளியாகும் அறிவிப்புகளினால் இன்று சிங்கள மக்கள் வடக்கில் வாழமுடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. அதே போன்று தமிழ் முஸ்லிம் மக்களிடையேயும் அச்ச நிலை உருவாகியுள்ளது. எனவே இந்த அச்ச நிலையை நீக்குவதே எமதுகட்சியின்பிரதான இலக்காகும்.

பெரும்பான்மையினரான சிங்கள மக்களிடையே அச்ச நிலையை ஏற்படுத்திவிட்டு தமிழ் மக்களின் அச்ச நிலையை நீக்கிவிடமுடி யாது. அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். பிரித் தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இந்த நிலையே காணப்படுகிறது.

எனவே முதலில் சிங்கள மக்களின் அச்சநிலையை நீக்கிவிட்டு தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை நடத்த தேவையான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்காக எதையேனும் அர்ப்பணிப்பதற்கு எமது கட்சி தயாராக உள்ளது.

எமது ஆட்சியில் இழைக்கப்பட்ட தவறுகளினால்தான் எம்மை ஆட்சியிலிருந்து நீக்குவதற்கு மக்கள் தீர்மானித்தார்கள்.மக்களின்ஆணைக்கு நாங்கள் தலை வணங்குகின்றோம். எனவே தவறுகளை சரிப்படுத்தி பயணத்தை ஆரம்பிக்கின்றோம்.

இரண்டுவருடங்களுக்குப்பின்னர் எமதுதவறுகளைதிருத்திக் கொண்டு பயணத்தை தொடர்வதற்குத் தயார் என்பதை மஹிந்த ராஜபக்ஷவும் கூறியிருந்தார். நாங்களும் அதனையே கூறுகின்றோம். எனவே எமக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.

2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம்மூலம்நல்லாட்சிஅரசு மக்களின் மீது அதிக வரிச் சுமையை சுமத்தி நாட்டின் பொருளாதாரத்தில் பெரியபாதிப்பினைஏற்படுத்தியுள்ளது.

இதன்அடிப்படையில்நாட்டினுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதுக்காக ஒன்றிணைந்த கூட்டு எதிர்க் கட்சி யின் முக்கிய உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஸ்ரீலங்கா பொது மக்கள் முன்னணியை உருவாக்கியுள்ளோம்.

ஸ்ரீலங்கா பொதுமக்கள் முன்னணியில் மஹிந்த ராஜபக்ஷ வுக்கு எந்த ஒரு பதவியும் வழங்கப்படமாட்டாது. கட்சி மற்றும் அரசியல் பதவிக்காக மட்டும் பல கட்சிகள் தற்போது இயங்கிவருகின்றன. அவ்வாறிருக்க தங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்காக இந்தப் புதிய கட்சி செயற்படும்.

மேலும்சில கட்சிகள்பணத்துக்காக மக்கள்வாக்குகளை பெற்றவர்களை விடுத்து விருப்பு வாக்கு முறையில் கட்சிகளின் தலைமைத்துவத்தை வழங்கி வருகின்றனர்.

கட்சியின் நிலைவரங்கள் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள் தொடர்பான அனைத்துதகவல்களையும்மக்கள் அறிந்துகொள்ளும்விதத்தில்அந்த தகவல் அறியும் உரிமையினை எமது கட்சி வழங்கும்.

நாட்டில் சிறந்ததொரு அரசியல் முறையினை ஏற்படுத்த இந்தப் புதிய கட்சியும் புதிய திட்டமும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெறும். - என்றார். (ம)

## மஹிந்தவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமானடீ.ஏ.ராஜபக்ஷவின் நினைவு தின நிகழ்வு நேற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

அங்கு சென்ற மேர்வின் சில்வாவை ஏற்பாட்டாளர்கள் கூக் குரல் இட்டு வெளியேற்றினர். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ வின் அழைப்புக் கிடைத்தமையாலேயே தான் அங்கு வருகை தந்தார் என மேர்வின் சில்வா ஊடகங்களிடம்தெரிவித்தார்.

இருப்பினும், ஏற்பாட்டுக் குழுவினாலோ,மஹிந்தராஜபக்ஷவினாலோ அவருக்குஅழைப்புவிடுக்கப்படவில்லையெனக் கூறப்படுகின்றது.

நிகழ்வுகள் ஆரம்பிக்கவிருந்த நிலையில், அங்கு சென்ற மேர்வின் சில்வா, அங்கிருந்த மகா சங்கத்தினரின்ஆசீர்வாதம்பெற்றுக்கொண்டு, முன்வரிசை யில் அமர்ந்திருந்த சமல் ராஜபக்ஷ மற்றும் பிரமுகர்களுடன் கதைத்தவாறு டீ.ஏ. ராஜபக்ஷவின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

அவர் மலர் அஞ்சலி செலுத்தும் போது அங்கிருந்தோர் அவருக்கு எதிராக கூக்குரலிட்டனர். இதற்குப் பதிலடியாக மேர்வின் சில்வாவும் கூக்குரல் இட்டவாறே வெளியேறிச் சென்றார். செல்லும் போது ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த மேர்வின் சில்வா-

எனக்கு அரசியல் பிரவேசத் தைப் பெற்றுத் தந்தவர் என்ற வகையில் அவருக்கு மரியாதை செலுத்தும் முகமாகவே வருகை தந்தேன். வேட்பாளர் பட்டியலில் பெயர் போட்டுக் கொள்வதற்காக நான் வரவில்லை. மஹிந்த ராஜபக்ஷவுடன்-நரிகள் இருபதனால் தான் அவர் கடந்த தேர்தலில் தோல்வியடைந்தார். இந்த நரிகளினாலேயே நான் தொடர்ந்தும்சிங்கமாகசெயற்படுகின்றேன். - என்றார். (ம)

## வடமாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில்இருந்தேமேற்படிநால்வரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம்இருந்துகைக்குண்டுகள்-02, கத்திகள்-04, தங்கநகைகள்-28 பவுண், முச்சக்கரவண்டி - 1, மோட்டார் சைக்கிள் - 1, முகத்தை மூடி மறைத்துக் கட்டும் கறுப்புத் துணிகள் என்பன மீட்கப்பட்டன.

இந்தநபர்கள்மாங்குளம், சிலாவத்துறை, ஒட்டுசுட்டான், அடம்பன், மன்னார், மாங்குளம், கனகராயன் குளம், புளியங்குளம், செட்டிகுளம், வவுனியா ஆகிய பகுதிகளில் இடம் பெற்றதிருட்டுமற்றும்கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இந்தக் கும்பல் பொதுமக்களைஅச்சுறுத்திவந்தது எனவும்இவர்களின்செயற்பாட்டால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களுடன் மேலும் பல நபர்களுக்குத் தொடர்பு இருக்கின்றதுஎனவும்அவர்களைத்தேடி வலைவிரித்திருக்கின்றோம்எனவும் பொலிஸார் கூறினர்.

வவுனியா - மன்னார் மாவட்டங்களுக்கானபிரதிப்பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னக் கோனின் ஆலோசனைக்குஅமைய, சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் எம்.ஆர். சிசிரகுமார வின் வழிகாட்டலில் உதவிபொலிஸ்அத்தியட்சகர்ஆர்.எம். எஸ்.கே.ரட்ணாயக்கா மற்றும் வவுனியா மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி பிரசாத் ஆகியோரின் தலைமையிலான பொலிஸ் குழுவே இந்தச்சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் உறவினர்கள் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் வவுனியாபொலிஸ்நிலையத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-100)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.